Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு + II = 14 விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவு • பாதுகாப்பு • நம்பகத்தன்மை

FedEx Express®

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835, 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ..ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 24ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 25 (09.11.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:40

# பலாலி விமானத் தளத்துக்கு உரிமை கோருகிறது இந்தியா!

## நிபந்தனைகளை ஏற்க இலங்கை அரசு மறுப்பு!

(கொழும்பு)

பலாலி விமானத் தளத்தை புனரமைப்புச் செய்த பின்னர் இந்திய மற்றும் இலங்கை விமானப்படையினரே இதைப் பயன்படுத்த வேண்டும் என்றும் வேறு நாட்டு விமானங்கள் இங்கு தரையிறங்க அனுமதிக்கக் கூடாதென்றும் இந்தியா தெரிவித்த யோசனையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துவிட்டதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலி விமானத் தளத்தை புனரமைத்துத் தருவதாக இந்தியா ஏற்கனவே உறுதியளித்திருந்தது. இந்தப் புனரமைப்புப் பணிகளுக்கு 500 மில்லியன் ரூபா செலவாகும் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இந்தியா இலங்கை விமானப்படைகளே இந்த விமானத் தளத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்தியா நிபந்தனை விதித்து வந்ததால் புனரமைப்புப் பணிகள் இழுபறிப்பட்டு வந்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### எரிந்துகொண்டிருந்த விளக்கினுள் பெற்றோலை ஊற்றிய பெண் பரிதாபகரமாக உயிரிழந்தார்!

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிப் பகுதியில் பெற்றோல் தீப்பற்றிக்கொண்டதில் தீக்காயங்களுக்குள்ளான குடும்பப் பெண்ணொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நீர்வேலியைச் சேர்ந்த 45 வயதான வேலாயுதம் பரமேஸ்வரி என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வாழைச்சேனை கிரனேட் வீச்சில் வயோதிபர் ஒருவர் காயமுற்றார்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை நகரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் சம்பவமொன்றில் 65 வயதுடைய வயோதிபர் ஒருவர் காயமடைந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எம்.அகமதுலெப்பை என்ற இந்த வயோதிபர் வியாபாரத்தின் நிமித்தம் கடையில் நின்ற போது அவரது கடைக்கு முன்பாக இந்தக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைச்சேனை படையதிகாரியின் வாகனம் மீதான தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் கண்டனம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - வாழைச்சேனை நகரில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறை வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு -

நேற்றுக் காலை 11.00 மணியளவில் வாழைச்சேனை - பேத்தாழை இறங்கு துறைக்கு அருகில் வைத்து கல்குடா இராணுவ முகாம் தளபதியின் வாகனத்துக்கு

தொடர்போ இல்லை.

இந்தச் சம்பவம் படைத்தரப்பின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதால் இதன் சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்பட்டு சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் வவுணதீவு சூனியப் பிரதேசத்தில் சந்திப்பு இடம்பெறும் வேளையில் நாம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இப்படியான தாக்குதலை இராணுவத்தின்

## ‘காலத்தை வென்றவன்’ நூல் அமெரிக்காவில் வெளியீடு!



தமிழீழ தேசியத் தலைவரின் பன்முகத் தன்மையை வெளிக்காட்டுகின்ற ‘காலத்தை வென்றவன்’ நூலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற ஆய்வுநூலும் அமெரிக்காவின் நியூயேர்சி மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் வெளியிட்டு வைக்கப்பட்டன.

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் டொக்டர் ஜெயலிங்கம், தேசியத் தலைவரின் ஆவண

மட்டக்களப்பு - வாழைச்சேனை நகரில் நேற்று இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறை வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு -

நேற்றுக் காலை 11.00 மணியளவில் வாழைச்சேனை - பேத்தாழை இறங்கு துறைக்கு அருகில் வைத்து கல்குடா இராணுவ முகாம் தளபதியின் வாகனத்துக்கு கைககுண்டு வீசப்பட்டு பின் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கெள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தச் சம்பவத்துக்கும் எந்தவித சம்பந்தமோ இந்தச் சம்பவம் படைத்தரப்பின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதால் இதன் சூத்திரதாரிகள் கண்டு பிடிக்கப்பட்டு சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து தண்டனை வழங்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் வவுணதீவு சூனியப் பிரதேசத்தில் சந்திப்பு இடம்பெறும் வேளையில் நாம் பல தடவைகள் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

இப்படியான தாக்குதலை இராணுவத்தின் மீது நடத்துவதால் சமாதான சூழலை பாதிப்படையவைக்கலாம் என தேசவிரோதக் கும்பல்கள் கருதுகின்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற ஆய்வுநூலும் அமெரிக்காவின் நியூயோர்சி மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழ்ச் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் வெளியிட்டு வைக்கப்பட்டன.

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் டொக்டர் ஜெயலிங்கம், தேசியத் தலைவரின் ஆவண படத்தொகுப்பை அறிமுகம் செய்து வெளியிட்டு வைக்க, மனோரஞ்சன் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். இந்தநூல் ஜெனீவாவை மையமாகக் கொண்டு இயங்கும் அனைத்துலக தமிழர் ஒன்றியத்தின் வெளியீடாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் இன்று வருகின்றார்!

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று காலை 8 மணிக்கு கிளிநொச்சி வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாலை கட்டுநாயக்க விமானநிலையம் வந்தடையும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினர் - அங்கிருந்து விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்ரரில் கிளிநொச்சி பொது விளையாட்டரங்கை வந்தடைவர்.

இவர்களை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் வரவேற்பர்.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து இரு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்துவதற்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்படையினரின் உறுதிமொழியை அடுத்து

# மன்னார் மீனவரின் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தம்!

(மன்னார்)

மன்னார் - பேசாலை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதை தடுத்து நிறுத்துமாறு கோரி மன்னார் மீனவர்கள் நடத்திவந்த மறியற்போராட்டம் கடற்படையினர் வழங்கிய உறுதிமொழியையடுத்து நேற்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

மன்னார் பகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து - அதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரி கடந்த சில தினங்களாக மன்னார் மீனவர்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

தலைமன்னார் பிரதான வீதியில் வீதிக்கு குறுக்கே மீன்பிடிபடகுகளையும், உபகரணங்களையும் வைத்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், இயல்பு நிலை பாதிக்கப்பட்டு வந்ததையடுத்து, மன்னார் அரச அதிபரின் ஏற்பாட்டில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கடற்தொழில் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜி.பியசேன, கடற்படையினரின் வடக்கு கட்டளைத் தளபதி ட்ரியல் அட்மிரல் ரட்ண கீர்த்தி, வன்னி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க, வன்னிப் பகுதிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் -
யாழ் மாவட்ட வலயக் கல்விபணிமனைகளின்

# கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் -
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின்

## இணைந்த ஆதரவுடன்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# நடாத்தும்

## க.பொ.த (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்)

## யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்தவுள்ளது.

### யாழ். மாவட்டத்திற்கான கருத்தரங்கு நிலையங்கள்

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தென்மராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தி.
02. யா/வரணி மகாவித்தியாலயம்.
03. யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
04. யா/மட்டுவில் மகாவித்தியாலயம்
05. யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வடமராட்சி வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/உடுத்துறை மகாவித்தியாலயம்.
02. யா/மருதங்கேணி இ.த.க.பாடசாலை.
03. யா/குடத்தனை அ.த.க.பாடசாலை.
04. யா/ஹாட்லிக் கல்லூரி
05. யா/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
06. யா/வட இந்து மகளிர் கல்லூரி.
07. யா/வேலாயுதம் மகாவித்தியாலயம்.
08. யா/தும்பளை சிவப்பிரகாச மகாவித்தி.
09. யா/புற்றளை மகாவித்தியாலயம்.
10. யா/வல்வை சிவகுரு வித்தியாலயம்.
11. யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
12. யா/ஞானசாரியார் கல்லூரி.
13. யா/விக்னேஸ்வராக் கல்லூரி.
14. யா/நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
15. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
16. யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
17. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

காலம்:- 08.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
09.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- யாழ். வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம்.
02. யா/நடராசா இராமலிங்கம் வித்தியாலயம்.
03. யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.
04. யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
05. யா/சோமாஸ்கந்தாக் கல்லூரி.
06. யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.
07. யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.
08. யா/சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்.
09. யா/வேம்படி மகளிர் கல்லூரி.
10. யா/மத்திய கல்லூரி.
11. யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.
12. யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.
13. யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி.
14. யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
15. யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.
16. யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.
17. யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
18. யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.
19. யா/இந்து மகளிர் கல்லூரி.
20. யா/இந்துக் கல்லூரி.
21. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

காலம்:- 09.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- வலிகாமம் வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள் :
01. யா/இராமநாதன் கல்லூரி.
02. யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.
03. யா/உடுவில் மகளிர் கல்லூரி.
04. யா/அருணோதயாக் கல்லூரி.
05. யா/யூனியன் கல்லூரி.
06. யா/மல்லாகம் மகாவித்தியாலயம்.
07. யா/விக்ரோறியாக் கல்லூரி.
08. யா/வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
09. யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி.
10. யா/மானிப்பாய் மெமோறியல்.
11. யா/இளவாலை சென் கென்றியரசர் கல்லூரி.
12. யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.
13. யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

காலம்:- 09.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
10.11.2004 (ஆங்கிலம்)
வலயம்:- தீவக வலயம்.
கருத்தரங்கு இடம்பெறும் நிலையங்கள்:
01. யா/சரஸ்வதி வித்தியாலயம்.
02. யா/சேர்வைத்திலிங்கம் துரைசாமி மகாவித்தியாலயம்.
03. யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்.
04. யா/ஊர்காவற்றுறை சென் அன்ரனீஸ்.
05. யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம்.
06. யா/காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை


45 வருடகாலசேவையில் ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ் 212, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளார் இலங்கை வங்கியின் 18 plus இளம்பருவத்தினருக்கு அன்புடன்....

கொமர்ஷல் வங்கி உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

SICS கணினி சேவைகள் இல.125A , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். எங்களின் நோக்கம், உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

Global Info IDM (PVT) LTD. IDM

IIS 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2831

S.T.P 73, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம 302, கே.கே.எஸ் வீத, யாழ்ப்பாணம்.

UNIT 347, K.K.S. Road, Jaffna

Softview Computer College 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna


### கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

| | | |
|---|---|---|
| 01. | பூநகரி | - பூநகரி மகாவித்தியாலயம் |
| 02. | முழங்காவில் | - முழங்காவில் மகாவித்தியாலயம் |
| 03. | ஜெயபுரம | - ஜெயபுரம் அ.த.க. பாடசாலை |
| 04. | பளை | - பளை மத்திய கல்லூரி |
| 05. | தருமபுரம் | - தருமபுரம் மகா வித்தியாலயம் |
| 06. | முரசுமோட்டை | - முருகானந்தா மகா வித்தியாலயம் |
| 07. | வட்டக்கச்சி | - வட்டக்கச்சி மகாவித்தியாலயம் |
| 08. | இராமநாதபுரம் | - இராமநாதபுரம் மகா வித்தியாலயம் |
| 09. | அக்கராயன | - அக்கராயன் மகா வித்தியாலயம் |
| 10. | இரணைமடு | - கனகாம்ப அ.த.க.பாடசாலை |
| 12. | கனகபுரம் | - கனகபுரம் மகா வித்தியாலயம் |
| 12. | உருத்திரபுரம் | - கிளிநொச்சி இந்துக் கல்லூரி |
| 13. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மகா வித்தியாலயம் |
| 14. | கிளிநொச்சி நகர் | - கிளிநொச்சி மத்திய கல்லூரி |
| 15. | விசுவமடு | -பிரமந்தனாறு மகா வித்தியாலயம் |

### தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடுமாறு கோருவோர்

# அந்தக் கோரிக்கைக்குப் பதிலாக மாற்று தீர்வை முன்வைக்கவேண்டும்

## சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன்




தமிழீழ விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவேண்டும் எனக் கோரிக்கை விடுப்பவர்கள், அதற்கான மாற்றுத் தீர்வை முன்வைக்க வேண்டுமென கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பின் பிராந்திய மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய ஊடகவியலாளரும், ஆய்வாளருமான நாராயணசாமி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது தனிநாட்டுக் கோரிக்கையை விட்டுக்கொடுத்து சமரசம் செய்யத் தயாராக இருக்கின்றாரா என ஆய்வாளர் நாராயணசாமி இம்மாநாட்டில் கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக அங்கு கருத்துத் தெரிவித்த வி.ரி. தமிழ்மாறன் -

விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடத்தயாரா என்று கேள்வி எழுப்புவதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து தென்னிலங்கை அரசாங்கம் ஏதாவது உத்தரவாதத்தை வழங்குமா என்பதைப் பார்க்கவேண்டும்.

இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ் மக்களுக்கு எந்தவொரு உத்தரவாதத்தையும் தென்னிலங்கை அரசுகள் வழங்கத் தயாரில்லை என்பதுடன், இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த ஒத்த நிலைப்பாடு தென்னிலங்கை அரசியல் சக்திகளிடம் இல்லை என்பதையும், கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் வி.ரி. தமிழ்மாறன் தெரிவித்தார்.

அளப்பரிய தியாகங்கள் மூலம் போராடி வந்த விடுதலைப் புலிகள் இன்று ஒரு அசியல் சக்தியாகவும் பரிமாணம் பெற்று, தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கான ஒரு இடைக்காலத் தீர்வு குறித்து கையளித்துள்ள வரைபை இலங்கை அரசாங்கம் பரிசீலித்து உரிய பதிலை வழங்குவது முக்கியம் என்றும் அவர் தனது உரையில் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு கலதாரி உல்லாச விடுதியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற தெற்காசிய சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிராந்திய மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து அந்தந்த நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும், ஆய்வாளர்களும் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டனர்.

### மட்டக்களப்பில்

# படையினர் - புலிகள் சந்திப்பு இருபதாம் திகதி நடைபெறும்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இராணுவ அதிகாரிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த சந்திப்பு எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பு வவுணதீவுப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அலுவலம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி படையினருக்கும் - புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் தீர்மானத்துக்கமையவே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண படை அதிகாரிகளுக்கும், புலிகள் இயக்க பிரதிநிதிகளுக்கும் இடையில் தடைப்பட்டிருந்த சந்திப்புக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நான்காவது தடவையாக இந்த மாதம் சந்திக்கவுள்ளனர்.

# பிக்கு எம்.பியின் மனு விசாரணையிலிருந்து விலகுவதாக பிரதம நீதியரசர் அறிவிப்பு!

(கொழும்பு)

பஞ்ஞானந்த தேரரின் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணையின்போது, தான் இந்த மனுவைத் தனிப்பட்ட காரணங்களுக்காக இனிமேல் விசாரிக்கப்போவதில்லை என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அறிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து நீக்கப்பட்டதை ஆட்சேபித்து பஞ்ஞானந்த தேரர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு, பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையில் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தனிப்பட்ட காரணங்களுக்காகத் தாம் இந்த மனுவைத் தொடர்ந்து விசாரிக்கப்போவதில்லை என்று அறிவித்தார்.

அத்துடன், மேல் விசாரணையை இன்றும் நாளையும் ஒத்திவைத்தார். விசாரணையின்போது மனுதாரரின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ ஆஜரானார்.

# விடுதலைப் புலிகளிடம் விமானங்களும் உலங்கு வானூர்திகளும் உள்ளனவாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சிறியரக விமானங்களும், உலங்கு வானூர்திகளும் இருப்பதாக போர்த்துறைக் கல்விக்கான சர்வதேச மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிறுவனத்தினால் வெளியிடப்படும் 'படைத்துறை சமநிலை' என்ற வருடாந்த வெளியீட்டிலேயே, இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் றொபின்சன் ஆர்.44 அஸ்ரோ என்னும் சிறியரக உலங்கு வானூர்திகளும், இரண்டு சிறிய விமானங்களும் இருப்பதாக இவ்வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிரவும், யுத்த தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், நிலத்திலிருந்து ஆகாயத்துக்கு ஏவப்படும் சாம் ரக ஏவுகணைகள் மற்றும் 122 எம்.எம்., 152 எம்.எம்., 120 எம்.எம். ஆட்லறிகளும் இருப்பதாகவும் இந்த வெளியீட்டில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காத்தான்குடி முஸ்லிம்களின் மார்க்கப் பிரச்சினைக்கு தீர்வு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தில் இஸ்லாமிய மதப் பிரிவினரிடையே கடந்த 25 ஆண்டுகளாக நிலவிவந்த மார்க்கப் பிரச்சினைக்குத் தற்போது சுமுகமான தீர்வு காணப்பட்டுள்ளதாக, சம்பந்தப்பட்ட தரப்புக்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதலாக முஸ்லிம்கள் வாழும் இந்தப் பிரதேசத்தில் ஜமயதுல் உலமா சபை சார்புடையவர்களுக்கும், அகில இலங்கை மெய்ஞானப் பேரவை சார்புடையவர்களுக்கும் இடையே மார்க்கக் கொள்கைகளில் உள்ள முரண்பாடுகள் வன்முறைகளான வெடித்தன.

முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா தலைமையில் இடம்பெற்ற சமரசப் பேச்சுவார்தையில் - காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அப்துல்ரகு மௌலவியும் அவரைச் சார்ந்தவர்களும் இஸ்லாமிய சகோதரர்கள் ஆகையால் பொது மக்கள் அந்நிய முஸ்லிம் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளுமாறு அந்தச் சமாதானப் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மெய்ஞானப் போக்கைச் சேர்ந்தவர்கள், மதம் மாறியவர்கள் என்ற பிரகடனம் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் முகமாக- பள்ளிவாசல்களில் உள்ள ஒலி பெருக்கிகள் மூலம் அறிவிக்கப்பட்டது.

# வட - கிழக்கு மீனவர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் நடைமுறை!

(கொழும்பு)

விவசாயக் காப்புறுதிக் கூட்டுத்தாபனமும், கடற்தொழில் திணைக்களமும் இணைந்து வடக்கு - கிழக்கு மீனவர்கள் மத்தியில் மீனவ ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள 65 ஆயிரம் மீனவர்களில் 15 மீனவர்கள் மட்டுமே இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளதாக மீனவ ஓய்வூதியத் திட்டப் பிரதிப் பணிப்பாளர் டபிள்யூ.கே.மஞ்சநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் உள்ள ஒரு லட்சத்து 15 ஆயிரம் மீனவர்களுள் 51 ஆயிரம் பேர் இந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டுவரை 650 மீனவர்கள் ஓய்வூதியம் பெற்றுவருகின்றனர்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இணைந்து கொள்பவர்கள் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதுடன், ஏனைய நன்மைகளாக - இலவச காப்புறுதி, மாணவர்களுக்கான உதவிகள், இறப்பு அல்லது அங்கவீனரானால் அதற்கான நஷ்டஈடு ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் 18 வயதுக்கும் - 59 வயதுக்கும் இடைப்பட்ட மீனவர்கள் இணைந்து கொள்ளமுடியும் என்றும், இந்த ஓய்வூதியத் திட்டம் தொடர்பான மேலதிக விபரங்களை விவசாய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலும், கடற்தொழிலாளர் திணைக்களத்திலும் பெற்றுக் கொள்ளமுடியும் என, மீனவர் ஓய்வூதியத் திட்டப் பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.



அண்மையில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட முதியோர் தின விழாவில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (14)

### வெளிவாரி கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்குத் தகுதியானோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிக்கிடையில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்களை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்து அனுப்பும்படி, பல்கலைக் கழகப் பதிவாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

க.பொ.த உயர்தரத்தில் பழைய பாடத்திட்டத்தின்படி பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் 3 பாடங்களில் சித்தியும், 180 இற்குக் குறையாத புள்ளிகளும் பெற்றிருக்கவேண்டும்.

புதிய பாடத்திட்டமாயின் 3 பாடங்களில் சித்தியும், 135 இற்குக் குறையாத புள்ளிகளும் பெற்றிருக்கவேண்டும்.

எனவே செய்த பதிவு கலாவதியாகியிருப்பின் புதிய மீள் பதிவுகளுக்கும் விண்ணப்பிக்கலாம்.

# பழைய வாகனங்களின் இறக்குமதிக்குத் தடை!

(கொழும்பு)

பயன்படுத்தப்பட்ட பழைய வாகனங்களை இறக்குமதி செய்வது இலங்கையில் தடை செய்யப்படவுள்ளது.

பழைய வாகனங்களின் பாவனையால் ஏற்படுகின்ற சூழல் மாசடைதலைத் தொடர்ந்து, இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கப்பட்ட வானங்களை இறக்குமதி செய்வதைத் தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், வாகனப் பரிசோதனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

தற்பொழுது பழைய வாகனங்களின் இறக்குமதியைத் தடைசெய்யவுள்ளதாக தெரிவித்த போக்குவரத்து அமைச்சர் - நாட்டில் உள்ள பழைய வாகனங்களால் தேவையற்ற பிரச்சினைகள் தோன்றுவதாகவும், இவற்றின் பாவனையை நாட்டில் கட்டுப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆனால், பழைய வாகனங்களை பாவனையிலிருந்து அப்புறப்படுத்தினால் பாரிய போக்குவரத்து நெருக்கடி ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

பழைய வாகனங்களின் இறக்குமதியைத் தடைசெய்வதற்கான சட்டமூலம் தயார் செய்யப்பட்டு வருவதாகவும், விரைவில் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெறப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட அதிரடிப்படையினர் அனுமதிச் சீட்டு விற்பனை!

ஆரையம்பதியில் விசேட அதிரடிப்படையினர் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.


ஆரையம்பதி - காத்தான்குடி எல்லையில் வைத்து குறிப்பாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்தோர் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

இதேவேளை, ஆரையம்பதி பகுதியில் இசை நிகழ்ச்சி ஒன்றின் அனுமதி சீட்டுக்களை படையினர் வலுக்கட்டாயமாக பொதுமக்களிடம் விற்பனை செய்வதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதிவரை இரத்தினபுரியில் நடைபெறும் இசை நிகழ்ச்சிக்கான அனுமதிச்சீட்டுகளே தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

சிங்களத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த ரிக்கட் குறித்து வாங்கும் பாமர மக்கள் விளங்கிக் கொள்ளமாட்டார்கள் என்றும், படையினரின் அச்சம் காரணமாகவே அனுமதிச் சீட்டுகளை ரூபா 30 கொடுத்து வாங்கிச் செல்வதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

# மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் பங்களாதேஷ் அணி படுதோல்வி!



பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் பங்களா தேஷின் டாக்கா நகரில் நடை பெற்ற மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் 83 ஓட்டங் களால் நியூஸிலாந்து அணி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நியூஸிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 50 ஓவர்கள் நிறை வில் நியூஸிலாந்து அணி 7 விக் கெட்டுக்களை மட்டும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது. அஸ்ரில் 27, சின்கிளயர் 66, ஹரிஸ் 9, ஸ்ரைரிஸ் 51, மக்மிலன் 39, கெய் ன்ஸ் 34, விக்ரோரி ஆட்டமிழக்கா மல் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

கெய்ன்ஸ் 16 பந்துகளில் 2 பவுண்டரி 3 சிக்சர்களுடன் 34 ஓட் டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக் கது.

பந்துவீச்சில் மொகமட் ரபீக் 4 விக்கெட்டுக்களையும் பாஷ்யா மற்றும் அஷ்ரப் அகமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தி னர்.

இதையடுத்து பங்களாதேஷ் அணி துடுப்பெடுத்தாட ஆரம்பித்தது. ஆயினும் 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 167 ஓட்டங்களை மட்டுமே அந்த அணி யால் பெறமுடிந்தது. இதனால் 83 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி தோல்வியடைந்தது.

ஜாவிட் ஒமர் 8, ரபீக் 21, இக் பால் 40, அஷ்ரபுல் 13, அகமட் 8, கபாலி 17 ஓட்டங்களையும் பெற் றனர்.


காலித் மசூத் 44 பந்துகளில் 4 பவுண்டரி, 1 சிக்சருடன் 40 ஓட்டங்களுடனும்,

இஸ்லாம் ரானா 8 ஓட்டங்களு டனும் ஆட்டமிழக்காமல் இருந்த னர்.

பந்துவீச்சில் விக்ரோரி 3, கெய்ன்ஸ், ஸ்ரைரிஸ், பிராங்ளின், மில்ஸ் ஆகியோர் தலா 1 விக் கெட்டையும் வீழ்த்தினர். நியூஸி லாந்து அணி 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளிலும் பங் களாதேஷைத் தோற்கடித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய சூதாட்டக்காரர் லஞ்சம் தர முயன்றார்!

## பிளெமிங் தெரிவிப்பு




1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் நடைபெற்றது. அப்போது லீ செஸ் டர் நகரில் உள்ள ஹோட்டலின் மதுபானசாலையில் நான் இருந் தேன். அப்போது இந்தியச் சூதாட் டக்காரர் கேத்தர்பால் என்னை அணுகி 2 லட்சம் பவுண்ட்ஸ் லஞ் சம் தருவதாகக் கூறி என்னை சூதாட்டத்தில் ஈடுபடச் சொன்னார். ஆனால் அதை மறுத்து விட்டேன் என நியூஸிலாந்து அணி கப்டன் ஸ்ரீபன் பிளெமிங் கூறியுள்ளார். இவர் தனது சுயசரிதைப் புத்தகத் தில் மேலும் கூறியிருப்பதாவது-

அப்போது என்னிடம் அவர் கால்பந்து, ரெனிஸைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் எல்லாம் சூதாட் டத்தில் ஈடுபடுவதாகக் கூறினார். இது குறித்து அணி நிர்வாகத்திட மும், ஸ்கொட்லாந்து பொலிஸிட மும் உடனே தெரிவித்து விட்டேன். இவ்வாறு பிளெமிங் அந்தப் புத்தகத தில் கூறியுள்ளார்.

பிளெமிங் புகார் கூறிய கேத்தர் பால் பிரபல சூதாட்டக்காரர் சஞ்சீவ சாவ்லாவுக்கு மிகவும் நெருக்கமான வர். சாவ்லா தென்னாபிரிக்க கப்டன் குரேஞ்ஞேக்கு லஞ்சம் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை வீழ்த்துவதே இலட்சியம் என்கிறார் அக்தர்!



(மும்பை)

இந்திய கிரிக்கெட் சபையின் 75 ஆவது ஆண்டுவிழாவைக் கொண டாடும் வகையில் நடாத்தப்படும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்தி யாவை வீழ்த்துவதே இலட்சியம் என்று பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் அக்தர் கூறி யுள்ளார்.

இந்திய கிரிக்கெட் சபையின் 75 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி கொல்கத்தாவில் கோலாகலமாகக் கொண்டாடப்பட வுள்ளது. இதனையொட்டி இந்திய-பாகிஸ்தான் அணிகள் மோதும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தப் போட் டிக்கான பாகிஸ்தான் அணி இன் னும் சில நாட்களில் இந்தியா வர விருக்கிறது. விளம்பரப் படத்தில் நடிப்பதற்காகமுன்னதாகவே வேகப் பந்து வீச்சாளர் அக்தர் இந்தியா வந்துவிட்டார்.

மும்பையில் அக்தர் நிருபர்களி டம் கூறுகையில்- இந்திய கிரிக் கெட் சபையின் 75 ஆவது ஆண்டு விழா போட்டியில் வெற்றிபெற துடிப்புடன் காத்திருக்கிறேன். இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்திய அணி எங்கள் நாட்டில் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரைக் கைப் பற்றியது. அதுபோல் இந்தியாவில் நடக்கும் போட்டியில் நாங்கள் வெற்றிபெறக் காத்திருக்கிறோம்.

இந்தியாவுடன் மோதல் முடிந்த பின்னர், பாகிஸ்தான் அணி அவுஸ் ரேலியாவில் நடக்கும் முத்தரப்புப் போட்டியில் கலந்துகொள்ளவிருக் கிறது.

மேற்கிந்தியத் தீவு, அவுஸ்ரே லியா ஆகிய மற்ற அணிகளும் இந்தப் போட்டியில் ஆடவுள்ளன. இதற்கு ஒரு முன்னோட்டமாக இந்தியாவுடனான ஆட்டம் நடக்க விருக்கிறது.

# அட்லாண்டா ரெனிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் மௌரிஸ்மோ



அட்லாண்டா ரெனிஸ் தொடரில் பிரான்ஸின் அமெலி மௌரிஸ்மோ இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். அமெரிக்காவின் பிலடெல் பியா நகரில் முன்னணி ரெனிஸ் வீராங்கனைகள் பங்கேற்கும் அட்லாண்டா ரெனிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

பெண்கள் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான மௌரிஸ்மோ, விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோ வாவை எதிர்த்து விளையாடவிருந்தார்.

ஆனால் போட்டிக்கு முன்னதாக ஷரபோவா காயம் காரணமாக விலகிக்கொள்ள மௌரிஸ்மோ இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் வெரா ஜுவோனரிவா 6-3, 7-6 என்ற செட்களில் சகநாட்டு வீராங்கனையான நாதியா பெட்ரோவாவை வீழ்த்தினார்.

# சர்வதேச விளையாட்டு ஆண்டாக 2005 ஐ ஐ.நா. சபை பிரகடனம்!

2005 ஆம் ஆண்டை சர்வதேச விளையாட்டு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

மதம், இனம், மொழி உட்பட அனைத்து எல்லைகளையும் தகர்த் தெறிந்து, மக்களை ஒன்றுபடுத்தக் கூடிய சக்தி விளையாட்டைத் தவிர வேறெதற்கும் இல்லை. ஆகவே, விளையாட்டுத் துறைக்கு, உரிய முக்கியத்துவம் அளிக்க ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்தது. அடுத்த ஆண்டை, சர்வதேச விளை யாட்டு ஆண்டாக அறிவிக்க ஒருமன தாக முடிவு செய்தது.


இதற்கான விழா, அமெரிக்கா வின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவல கத்தில் கடந்த வெள்ளி மிகச் சிறப் பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி யில் 2005 ஆம் ஆண்டை சர்வதேச விளையாட்டு மற்றும் உடற்கல்விக் கான ஆண்டாக, ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் அதி காரபூர்வமாக அறிவித்தார்.

அறிவிப்பு வெளியிட்டு கோபி அனான் பேசுகையில், விளையாட்டு என்பது உலகின் பொதுமொழி. உலக மக்களை ஒன்றிணைக்கக் கூடிய சக்தி விளையாட்டு அளவுக்கு வேறெதற்கும் கிடையாது. மதம், இனம், மொழி, பொருளாதாரம் என்று எந்தப் பாகுபாடும் இன்றி, அனைத்துத் தரப்பு மக்களையும் ஒன்றிணைக்கக்கூடிய சக்தி விளை யாட்டுக்கு உண்டு. கூட்டு முயற்சி, பொறுமை ஆகியவற்றின் முக்கியத் துவத்தை இளைஞர்கள், விளை யாட்டுத் துறையில் அனுபவபூர்வ மாகக் கற்றுக் கொள்ளமுடியும், என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் ரெனிஸ் பிரபலம் ரோஜர் பெடரர், மாரத்தன் சாம்பியன் வீரர் மார்க்ரெட் ஒகயோ உட்பட பலரும் கலந்து கொண்ட னர்.

# கப்டன் பதவியிலிருந்து கங்கூலியை நீக்கவேண்டும்!

## மார்க்வோ கூறுகிறார்



கப்டன் பதவியிலிருந்து கங் கூலியை நீக்கவேண்டும் `என்று அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் மார்க்வோ கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

இந்தியாவில் கிரிக்கெட் ரசிகர் கள் அதிகமாக இருக்கிறார்கள். சமீப காலமாக இந்திய அணி தோல்வியடைந்து வருவதால் ரசிகர் களிடையே வருத்தம் இருக்கும். தற்போது இந்திய அணிக்குத் தேவை கப்டனை மாற்றுவதுதான். தனிப்பட்ட முறையிலும், கப்டன் பதவியிலும் கங்கூலி சமீபகால மாகச் சாதிக்கவில்லை.

இந்திய அணி இனிவரும் போட்டி களில் சிறப்பாக விளையாடுவதற்கு கப்டன் பதவியில் இருந்து கங் கூலியை நீக்கவேண்டும்.

இந்திய அணியைப் பொறுத்த வரை சொந்தமண்ணில் தான் அதிக வெற்றி பெறுகிறது. வெளி நாட்டு ஆடுகளங்களில் சிறப்பாக ஆடமுடியவில்லை. இந்த நிலைமை மாறவேண்டும். அதற்குத் தகுந்த வாறு ஆடுகளங்களை உருவாக்க வேண்டும்.

இந்தியாவை அதன் சொந்த மண்ணில் தோற்கடிப்பது கடினம். ஆனால், வெளிநாட்டு ஆடுகளங் களிலும் அப்படி ஆடமுடிவதில்லை. நாக்பூர் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாக இருந்தது. போட்டி தொடங்க 2 தினங்கள் இருந்தபோது ஆடுகளத்தில் இருந்த புல்லைக் குறைக்க வேண்டும் என்று ஆடுகள அமைப்பாளரிடம் கங்கூலி கேட்டுக் கொண்டார்.

இது தவறான ஒன்றாகும். வேகப்பந்துவீச்சு ஆடுகளங்களில் வீரர்கள் விளையாடுவதை விரும்ப வேண்டும். இந்திய அணிக்குச் சிறந்த சகலதுறை ஆட்டக்காரர் கள் தேவை.

இவ்வாறு மார்க்வோ கூறினார்.

# விளையாட்டு

# மூன்றாவது சுற்றுக்கு யங்கென்றிஸ் தகுதி!

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன் னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறை யின் யாழ் மாவட்டப்பிரிவு நடாத் தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் நேற்றைய ஆட்டத்தில் அல் வாய் மனோகரா விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டம் தொடங்கி முதல் 5 ஆவது நிமிடத்தில் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது கோலை அடித்தது. அந்த அணி வீரர் ராஜா தட்டிக்கொடுத்த பந்தை அவ்வணி வீரர் ஸ்ரீபன் தலையால் இடித்து அப்பந்தைக் கோலாக்கி னார்.

அதன் பின்னர் மிகவும் கஸ்ரப் பட்டு இரு அணியும் விளையாடிய போதும் ஒருகோலையும் போட முடியவில்லை. இவ்வாறு இருந்த போதும் 22 ஆவது நிமிடத்தில் கிடைத்த அரிய வாய்ப்பை யங் ஹென்றிஸ் வீரர் ரஜீவ் கோலாக் கத் தவறிவிட்டார். இதனால் இடைவேளைக்கு முன்னதாக 1-0 என்ற கோல் கணக்கில் யங்ஹென் றிஸ் முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் யங் ஹென்றிஸ் அணியினர் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோணர் வாய்ப்பையும், மனோகரா அணியி னர் 22 ஆவது, 24 ஆவது நிமிடங் களில் கிடைத்த கோணர் வாய்ப் பையும் தவறவிட்டனர். இதனால் யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழ கம் மனோகரா விளையாட்டுக்கழ கத்தை 1:0 என்ற கோல் கணக் கில் தோற்கடித்து 3 ஆம் சுற்றுக் குத் தகுதி பெற்றது. (12)

# அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றுவோருக்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச மற்றும் தனியார் பஸ்களில் அளவுக்கு அதிகமாகப் பணிகளை ஏற்றுவதை நிறுத்த வேண்டும்.

இதன்மூலம் பாரிய விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றுவோர் பிடிக்கப்பட்டால், அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் சாள்ஸ் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் தொடர்பாக யாழ்.செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீதிகளில் - சைக்கிள்களில் ஒன்றுக்கு மேற்பட்டோர் சமாந்தரமாகச் செல்லுதல், சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் வாகனம் செலுத்துதல், வாகனத்தைச் செலுத்தியபடி கையடக்க தொலைபேசிகள் மூலம் பேசுதல், வலக்கைப் பக்கமாக திரும்பும் போது அவதானம் இல்லாது திருப்புதல் போன்ற செயற்பாடுகளால் அதிகளவு விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதைவிட, உள் வீதிகளிலிருந்து பிரதான வீதிக்கு திடீரென நுழைவது போன்ற காரணங்களாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே, விபத்துக்களைத் தடுப்பதற்கு பல முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

வாகன அனுமதிப்பத்திரம் இன்றி, வாகனங்களை செலுத்துபவர்கள் மீதும், வேகமாக செலுத்துபவர்கள் மீதும், வேகமாகவும், அளவுக்கு அதிகமாகவும் வாகனங்களில் பயணிகளை ஏற்றுபவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பாடசாலை நாட்களில் தினமும் காலையும், மதியமும் வீதிக்கடமைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படுவர் எனவும் தெரிவித்தார். (63)



நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துயர்வெல்லும் துணை இறுவெட்டு வெளியீட்டு விழாவில் - முதல் இறுவெட்டை பேராசிரியர் மோகனதாஸ் வழங்க செல்லத்துரை வேணுகோபால் பெற்றுக்கொள்கிறார்.



நெடுந்தீவு திலீபன் மருத்துவமனையில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையால் நடத்தப்பட்ட இலவச கண்ணாடி வழங்கும் வைபவத்தில் டொக்டர் மயிலேறும் பெருமாள் நோயாளர் ஒருவரைப் பரிசோதிக்கிறார் (17)

## தனியார் பஸ் தரிப்பிடத்தை இடம்மாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர பஸ் நிலையத்தில்-பஸ்கள் தரிப்பிடம் அமைந்துள்ளதால், போக்குவரத்துக்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளது.

தனியார் பஸ் தரிப்பு நிலையத்தை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அமைந்துள்ள தனியார் பஸ்நிலையம் - குறுகிய அளவான பகுதியைக் கொண்டுள்ளதால், பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து வெளிசெல்லும் பஸ்களும், உட்செல்லும் பஸ்களும் - மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதற்கமைய யாழ்.முற்றவெளிப் பகுதியில் பஸ்தரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கை ஒன்றை யாழ்.மாநகர சபை ஆணையாளர் மேற்கொண்டுள்ளார். (63)

## குடும்ப விபரங்கள் சேகரிப்பு

(கோப்பாய்)

வலி.கிழக்கு கோப்பாய் பரதேச செயலர் பிரிவிலுள்ள குடும்பங்களின் வபரங்கள் - அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் முகமாக, கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்பட்ட படிவங்கள், விரைவாகத் திரட்டபபட இருப்பதால், குறித்த படிவங்களைப் பூர்த்தி செய்து, 10 ஆம் திகதிக்கு முன்னர் கிராம அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு உதவப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## பெற்றோருக்கான கருத்தரங்கு

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் - கிராமங்கள் தோறும் நடைபெற்று வருகின்றன.

மூன்று வயதிலேயே முன்பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்ப வேண்டும் என்ற கொள்கைக்கு இணங்க - இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக அதிகாிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் கிராமங்கள் தோறும் சென்று விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

(122)

## மாவீரர்நாளை முன்னிட்டு விவாத சுற்றுப்போட்டி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை - மாவீரர் நாளை முன்னிட்டு, சிறந்தமுறையில் விவாதச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விவாதக்குழுக்கள் - எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நேரடியாக தமது விபரங்களை பதிவுசெய்துகொள்ள முடியும்.

இந்தச் சுற்றுப்போட்டியில் ஓர் அணியில் மூவர் வாதிட அனுமதிக்கப்டுவதோடு, தமிழீழ போராட்ட வரலாற்றை மையமாக வைத்தே தலைப்புக்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை மாணவர் பேரவையில் பெற்றுக்கொள்ள முடியும் எனச் சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் தெரிவித்தார்.

## ஒலிபெருக்கி அன்பளிப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பழைய மாணவி டொக்டர் சோதிமலர் முகுநதன் - இந்தப் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்த ஒலிபெருக்கி சாதனங்களைச் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் - கல்லூரி அதிபர் சுந்தரேசனிடம் கையளித்தார். (17)

## கணினி அறை அமைக்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

மாகாண கல்வி அமைச்சால், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்துக்கு 17 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனமூலம் மேலதிக கணினி அறை அமைக்கப்படவுள்ளது.

இதேபோன்று அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் கணினி அறை அமைப்பதற்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (29)

## தென்மராட்சி பாடசாலைகளில் மாணவர்களுக்கு சத்துணவு

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில், உலக உணவு திட்டத்தின் ஏற்பாட்டில் சத்துணவு வழங்கும் நடைமுறை கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையிலான மாணவர்களுக்கு காலையில் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவு வழங்கும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய பாடசாலை அதிபர், அபிவிருத்திச் சங்கச் செயலாளர், அந்தப் பகுதி கிராம சேவையாளர் உள்ளிட்ட முகாமைத்துவ குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. (17)

## நடத்துநரைத் தாக்கிய நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச்சபை பஸ் நடத்துநரைத் தாக்கிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கை போக்குவரத்துச்சபை பஸ்ஸில் பயணம் செய்துகொண்டிருந்த மூவர் - நடத்துநரைத் தாக்கியதுடன், அவருடைய பற்றுச்சீட்டுப் புத்தகத்தையும் கிழித்தெறிந்தனர்.

இந்தச் சம்பவத்தில் நடத்துனரைத் தாக்கியமை தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது, பிரஸ்தாப நபரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (29)

## வீதிகளில் நடமாடித்திரியும் கால்நடைகளுக்கு அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பொது இடங்கள், பிரதான வீதிகளில் நடமாடும் கால் நடைகள் நடமாடுவதற்கு, இந்த மாதம் 15 ஆம் திகதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் குறித்த தினத்தின் பின்னர் பிடிக்கப்படும் கால்நடைகள் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்படும் என்று நகரசபை அறிவித்துள்ளது.

வீதிகள், பொது இடங்களில் கால்நடைகள் நிற்பதால், வாகனங்கள் இவற்றுடன் மோதி விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அடுத்து, நகரசபை இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. (29)

## மணி மண்டபம் திறப்பு

(கொக்குவில்)

கொக்குவில் இந்துக் கல்லூரி மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபத் திறப்பு விழா - இன்று மாலை 4 மணிக்கு ஓய்வுபெற்ற நிறைவேற்றுப் பொறியியலாளர் இ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் விழா நாயகர்களாக மாணிக்கம் சுப்பிரமணியமும், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் பரமச்சாரிய சுவாமிகள், இந்து சமய பேரவைத் தலைவர் சீ.விநாசித்தம்பி ஆகியோர் சிறப்புரை வழங்கவுள்ளதுடன், திறப்பு விழா ஞாபகார்த்த மலர் வெளியீடும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

## கோப்பாய் பிரதேசத்தில் பாதீனிய ஒழிப்பு வாரம்

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் அண்மையில் நடைபெற்ற விவசாயக்குழுக் கூட்டத்தில், எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து ஒரு வார காலப்பகுதியை பாதீனிய ஒழிப்பு வாரமாக அனுஷ்டிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாகத் தனியார் காணிகள், வீடுகளிலுள்ள பாதீனியம் அழிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் - காணி உரிமையாளர்களாலேயே மேற்கொள்ளப்படவேண்டும்.

இரண்டாவது கட்டமாக விவசாய சம்மேளனத்தினர், கிராம அலுவலர் ஆகியோரின் ஒத்துழைப்புடன், பொது இடங்களிலும் கைவிடப்பட்ட பகுதிகளிலும் பாதீனியத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பாதீனியத்தை அழிக்காதோர் இனங்காணப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கோப்பாய் பிரதேச செயலகர் அறிவித்தார்.

## ஆயுர்வேத வைத்தியசாலைக்கு மருந்துகள் வந்தன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேசசபையால் நடத்தப்பட்டு வரும் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய சாலைக்கும் கரவெட்டி பிரதேச சபை இலவச சித்த ஆயுள் தைத்திய சாலைக்கும் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் வந்துள்ளன.

இந்த மருத்துவகைகள் வட-கிழக்கு மாகாண ஆயுள் வேத திணைக்களம் அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : சா.சானுகா
முகவரி : அழகாபுரி, அல்வாய் வடக்கு.

ஆறாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ. ஹர்சனா
முகவரி : கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்




# பிரிந்தாலும் பிரியாத பறவைகள்

எவ்வளவு தொலைதூரம் பறந்தாலும், கொண்ட காதல் மாறாது என்பது பறவைகளுக்கு என்னவோ உண்மைதான். அயர்லாந்தில் உள்ள கறுப்பு வால் கோட்விட் பறவைகள் புலம்பெயர்ந்து எவ்வளவு தூரம் பறந்தாலும், மீண்டும் தம் காதலரிடையே வந்து சேர்வது பறவை ஆராய்ச்சியாளர்களை வியப்பூட்டியுள்ளது.




வட ஐரோப்பிய இனமான இந்தப் பறவைகள் ஒரேயிடத்தில் பல மைல் தூரம் பல மாதம் பறந்த பின்னரும், ஒன்று சேர்வது அதிசயம் தான். ஒவ்வொரு வருடமும் அயர்லாந்துக்கு இனப்பெருக்கத்துக்காக வரும் இந்தப் பறவைகள் முன்னர் இணை சேர்ந்த அதே பறவையுடனேயே மீண் டும் இணைவது டன், ஒரே இடத்திலேயே மீண்டும் சந்திக்கின்றன. பின்னர் ஒரே சமயத்தில் பிரிந்து செல்கின்றன. மீண்டும் அடுத்த வருடமும் இதே கதைதான் என்கிறார் கிழக்கு சங்கிலியன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பறவையியலாளர். ஆண் பறவையும், பெண் பறவை யும் மீண்டும் அதேயிடத்துக்கு வருவதற்கு சராசரி மூன்று நாட்களே வித்தியாசம் இருக்கும். சுமார் ஒரு மாதம் இங்கு செலவிடும். இவை 25 ஆண்டு காலம் உயிர் வாழக்கூடியவை.



# செயற்கையாக இரத்தம் வரும்!

எதிர்காலத்தில் மற்றுமொருவருக்கு இரத்தம் வழங்கும் செயற்பாட்டை நிறுத்தக்கூடிய நிலைவரும் என, மினசோட்டா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். ஒருவரின் இரத்தத்தை எடுத்து, மற்றுமொருவருக்கு இதை வழங்குவதற்குப் பதிலாக, மனிதனின் பிரதான கலங்களை இழைய வளர்ப்பு மூலம் உருவாக்கிச் செயற்கையாக இரத்தத்தை உருவாக்கமுடியும் என இவர்கள் கூறுகின்றனர்.



மூளைய வளர்ப்புக் காரணிகள் எனப்படும் இரசாயனப் பதார்த்தங்களுடன் இணைப்பதன் மூலம், பல்வேறுபட்ட முதிர் இரத்தக் கலங்களை உருவாக்க முடியும் என நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆய்வு ஆரம்ப நிலையிலேயே உள்ளது.

மேலும் ஆய்வுகள் தேவை என்கின்றனர் மினசோட்டா பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.

இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், இரத்த வழங்கல் மூலம் மனிதரிடையே பரவும் பல நோய்களையும் தடுத்துவிடக்கூடிய ஏது நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது.

# பின்தங்கிய மொழியொன்று வெப் தளத்தில்



கனடாவில் மிகச் சிறிய தொகையில் வசிக்கும் மக்களின் இனூயிட் மொழியும் இனிமேல் வெப் தளங்களில் கோலோச்சும். கனடாவின் மிகப் பின்தங்கிய ஓர் மக்கள் கூட்டத்தின் இந்த மொழிக்குக் கிடைத்த இந்தக் கௌரவம் குறித்து, அந்த மக்கள் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

கணினிகளில் இந்த மொழியைக் கொண்டுவரமுடியா விட்டாலும், நெட்மூலம் இந்த மொழியைத் திரையில் விழுத்த முடியும். உலகில் மிகவும் பின்தங்கிய சமூகங்களில் ஒன்றாக மக்கள் உள்ளனர். வடக்கு கனடாவில் நுனாவூட் என்ற மிகப் பெரிய பகுதியில் இவர்கள் வசிக்கின்றனர். இந்த நுனாவூட் பிரான்சைவிட மூன்று மடங்கு பெரிய பகுதியாகும்.

1999 ஆம் ஆண்டில் கனடா அரசு இந்த மக்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் மூலம், இந்தப் பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பு அந்தப் பகுதி மக்களிடமே வழங்கப்பட்டுள்ளது. 18 ஆம் நூற்றாண்டளவிலேயே இந்த மொழி உருவானதாக நம்பப்படுகிறது.

# அரிய இனக்கரடி கொலை



பிரான்ஸுக்கும் – ஸ்பெயினுக்கும் இடையேயுள்ள மலைத் தொடர்களில் வசிக்கும் அரிய கரடி இனத்தைச் சேர்ந்த ஓர் பெண் கரடி – அண்மையில் வேட்டைக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டது பிரெஞ்சு இயற்கையியலாளர்களிடையே கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த இனத்தைச்சேர்ந்த 15 கரடிகள் மட்டுமே தற்போது இந்தப் பகுதியில் வசிக்கின்றன.

வேட்டையாடச் சென்ற தம்மையும், தமது வேட்டை நாய்களையும் இந்தக் கரடி தாக்கியதாலேயே, தாம் இந்தக் கரடியைச் சுட்டுக் கொன்றதாக வேட்டையாளர்கள் கூறுகின்றனர். வேட்டை நாய்களைக் கண்டால், இந்த இனக் கரடிகளுக்குக் கோபம் தலைக்கேறுவது வழமையான ஒன்று.

சுட்டுக் கொல்லப்பட்ட இந்தப் பெண் கரடியின் 10 மாதக்குட்டி துப்பாக்கிச் சூட்டில் இருந்து தப்பியோடிவிட்டபோதிலும், அது உணவு மற்றும் தாயின் அரவணைப்பின்றித் தப்பிப் பிழைப்பது கடினம் என, இயற்கையியலாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# புற்று நோயை எதிர்க்கும் சுப்பர் எலி!

புற்று நோய்த் தாக்கத்தை எதிர்த்து வாழக் கூடிய சுப்பர் இன எலிக்குடும்பம் ஒன்றை விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர். ஸ்பானிய தேசிய புற்றுநோய்க் கழக மருத்துவர்கள் பிறப்புரிமை பிரதியாக்கம் மூலம், இந்த வகை எலியினங்களை உருவாக்கி அவற்றின் புற்றுநோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரித்துள்ளனர். இதன் மூலம் எதிர்காலத்தில் மனிதர்களுக்கான புற்றுநோய் சிகிச்சை முறையை கண்டறிவது சுலபமாக இருக்கும் என இவர்கள் நம்புகின்றனர்.



கலங்களின் வளர்ச்சியைத் தடுக்கப் பொதுவான பிறப்புரிமை அலகுகளாக காவல்கார ஜீன்கள் உள் ளன. புற்றுநோயின்போது, கலங்கள் அபரிமிதமாகப் பெருகி அவற்றின் மென்சவ்வுகள் கிழிபடுகின்றன. டி.என்.ஏ தொழில் நுட்பம் மூலம் எலிகளின் இந்தக் காவல்கார பிறப்புரிமை அலகுகளைப் பிரதியாக்கம் செய்து, அவற்றின் அளவை இரட்டிப்பாக்குவதன் மூலம் புற்றுநோய் கலங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என, ஸ்பானிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# மொபைல் தொலைபேசி மூலம் பஸ் ரிக்கட்

செல்லிடத் தொலைபேசிகள் மூலம் உரையாடித் தகவல் பரிமாறிய காலம்போய், இனி அவற்றின் மூலம் பணம் செலுத்தி பஸ்ஸில் பயணமும் செய்யலாம். கவனிக்கவும் இங்கே அல்ல! ஜேர்மனியில். பிரபல மொபைல் தொலைபேசி உற்பத்தியாளர்களான நொக்கியா நிறுவனத்தினர் இதற்காகக் கம்பியில்லாத டிக்கட் முறைமை ஒன்றை ஜேர்மன் பஸ்களில் அறிமுகம் செய்யவுள்ளனர்.




அடுத்த வருடம் பிராங்பேர்ட்டில் உள்ள ஹானாவ் நகரில் உள்ள பஸ்களில் இந்த முறை அறிமுகம் செய்யப்படும்.




இதற்கென பஸ்களில் ஒரு கருவி பொருத்தப்படும். இவற்றுக்கு முன்னால் கைத்தொலைபேசியை அழுத்துவதன் மூலம், பணம் செலுத்தலுக்கான சமிஞ்ஞை அக்கருவிக்குக் கிடைக்கும். டிக்கெட்டும் வழங்கப்படும். இதற்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட நொக்கியா 3220 எனும் தொலைபேசிகள் பயன்படுத்தப்படும். வங்கியின் கிரடிட்காட் முறை போன்றே இந்த மொபைல் ரிக்கட் முறையும் இருக்கும்.

## திரை விமர்சனம்




## விஷ்வ துளசி

பொதுவான ஆனால் கனமான கதையுடன் வெளிவந்துள்ள புதிய திரைப்படம் கலையம்சப் படங்களை எதிர்பார்க்கும் ஆர்வலர்களுக்குப் பெருந்தீனியாகவும் மசாலா திரைப்படப்பிரியர்களுக்கு நொருக்குத் தீனியாகவும் அமைந்துள்ளது.

சிறப்பான, திறமையான நடிகர்களின் தெரிவுக்கும் கதையின் கருவுக்கும் பெண் இயக்குநரான அமெரிக்காவில் வசிக்கும் தமிழர் சுமதிராமுக்கு சபாஷ் கூறலாம். ஜமீன் காலத்தை நினைவூட்டுவதாக கதை செல்கிறது. 1960 ஆம் ஆண்டுகளில் கதை நடைபெறுவதாக இருக்கிறது.

துளசி என்ற நந்திதாதாஸ் நடன ஆசிரியராகக் கிராமத்துக்கு வருகிறார். அந்தக் கிராமத்தின் ஜமீன்தார் விஷ்வா எனும் மம்முட்டி. இவர்களிடையேயான பால்யகாதல் கதை பிளாஷ் பாக்கில் செல்கிறது.



விஷ்வா – துளசி காதலை வெறுக்கும் மாமன் மகன் சிவாவாக மனோஜ் கே.ஜெயன் இடையில் துளசியின் சம்மதம் இல்லாமல் அவளை மணக்க – விஷ்வா வெறுத்த நிலையில் ஜமீனுக்குத் திரும்பி வருகிறான். திருமணமான அன்றே இடி தாக்கிப் பைத்தி யமாகும் சிவா – இறுதியில் இந்த ஜமீனுக்கே வருகிறான்.

மம்முட்டி – நந்திதாஸ் மீண்டும் இணைய விரும்புகின்றனர். முடிவுக் காட்சியில் பழைய நினைவுக்கு வரும் சிவா இவர் களின் திருமணத்தைத் தடுக்க ஆவேசமாக வருகிறார் சோகமாக கதையும் முடிகிறது.


நீண்ட நாட்களின் பின் செயற்கைத்தன மற்ற மசாலா அந்த நல்லநேரம் திரைப்படம் தமிழில். அதுமட்டுமல்ல இளையராஜா – விஸ்வநாதன் ஜோடி நீண்ட நாட்களின் பின் இணைந்து இசைவழங்கியுள்ளனர். ஆர்ப்பாட்டமில்லாத மெல்லிசையாகவே இவை உள்ளன. கண்ணனின் ஒளிப்பதிவு கதையுடன் எம்மை நகர்த்த உதவுகிறது.

விஷ்வ துளசியின் மணம் நந்திதாதாஸாலேயே எங்கும் பரவுகிறது. மட்முட்டியும் ஈடு கொடுக்கிறார்.

- தர்ஷா -

## சிறுநீரகக்கற்கள் உடைவதை அறிய ஸ்ரெதஸ்கோப்

சிகிச்சை மூலம் உடலின் உட்புறத்தில் வைத்தே சிறுநீரகக்கற்கள் உடைக்கப்படும் ஒலியைத் துல்லியமாகக் கேட்பதற்கான ஸ்ரெதஸ்கோப் ஒன்றை லண்டன் வைத்தியசாலை ஒன்று உருவாக்கியுள்ளது. இந்தக் கருவி மூலம் அதிர்வலைச் சிகிச்சை யின் போது ஏற்படும் எதிரொலிகள் மூலம்,




சிறுநீரகக் கற்கள் சிதறுவதை உணர முடியும். இதன் மூலம் அதிர்வலைச் சிகிச்சையின் பின்னர், சிறுநீரகக் கற்கள் உடைக்கப்பட்டு விட்டனவா எனக் கண்டறிய மீண்டும் எக்ஸ் – ரே எடுத்துப் பார்க்கும் அவசியமில்லாமற் போய்விட்டதாக லண்டன் கேய்ஸ் வைத்தியசாலை மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுவரை 50 நோயாளர்களிடையே இந்த முறைமூலம் சிறுநீரகக் கல் தகர்ப்புச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டுள்ளதா என ஆராயப்பட்டுள்ளது.

இதன்மூலம் இந்தக் கருவியின் செயற்பாடு, சிறப்பாக இருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

## புகை + கோப்பி = வேண்டவே வேண்டாம்

எம்மில் சிலர் கோப்பி அருந்தியவாறே புகைப்பிடிக்கும் புழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். இது இவற்றில் ஏதாவது ஒன்றைத் தனியே உள்ளெடுப்பதைவிட மிகவும் ஆபத்தானது என எச்சரிக்கின்றனர் கிரேக்க மருத்துவர்கள். சிகரெட்டில் உள்ள



நிக்கொட்டினும், கோப்பியிலுள்ள கபே:.யின் என்ற நச்சுப் பதார்த்தமும் இரத்த நாடியில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், இதனால் உடல் குருதிச் சுற்றோட்டம் பாதிக்கப்படும் என்றும் எதென்ஸ் மருத்துவக் கல்லூரி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



புகைப்பிடிப்பவர்களினதும், அடிக்கடி கோப்பி அருந்துபவர்களினதும் நுரையீரல், இதயம் ஒரே சமயத்தில் தாக்குதலுக்குள்ளாகும் ஆபத்திருப்பதாக ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவற்றில் தாக்குதலுக்கு அதிகமாக உள்ளாவது – இதயத்திலிருந்து குருதியை எடுத்துச் செல்லும் பெருநாடியேயாகும். இதனால் நாடிகளின் தொழில் பாதிப்பு, இருதய நோய் என்பன ஏற்படுவதற்கு அதிகவாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.





## ஆடுகளைப் பாதுகாக்க நூதனப் போராட்டம்

விலங்குகள் பாதுகாப்புச் சங்கம் 'பிடா' சார்பில் சிங்கப்பூரில் வித்தியாசமான போராட்டம் நடைபெற்றது. சிங்கப்பூரிலுள்ள ஆவுஸ்ரேலிய தூதர் அலுவலகம் முன் இந்தச் சங்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஆடு போல வேடம் போட்டுக் கொண்டு ஆவுஸ்ரேலிய அரசுக்கு எதிராகவும், ஆடுகளின் ரோமங்களை எடுத்துக் கம்பளி ஆடை தயாரிக்கத் தடை விதிக்கக்கோரியும் அவர்கள் கோஷம் போட்டனர்.

தடையை மீறி இந்தப் போராட்டம் நடத்தியவர்களில் நூற்றுக் கணக்கானவர்களைப் பொலிஸார் அப்புறப்படுத்தினார்கள்.

## காணாமற் போகுமா ஆர்ட்டிக்?

பூமியின் வடதுருவமான ஆர்ட்டிக் கண்டத்தில் தற்போது மீள முடியயாத அளவு சுற்றாடற் சேதம் ஏற்பட்டு வருவதாக அதை அண்டியிருக்கும் நாடுகள் எச்சரித்துள்ளன.



ஆர்ட்டிக் கண்டத்தின் குளிர் கடலில் மிதக்கும் பனிப்பாறைகள் உருகும் வேகத்தைப் பார்த்தால், 2060 ஆம் ஆண்டுக்கும், 2100 ஆம் ஆண்டுக்கும் இடையே இந்தப் பகுதியில் பனிப்பாறைகளே இல்லாத நிலை ஏற்படவுள்ளது என, அந்த நாடுகள் எச்சரித்துள்ளன.

ஒசோன் படை சேதமுற்றிருப்பதால் அதனூடாகக் கசியும் புற ஊதாக் கதிர்களின் தாக்கமே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்தப் பகுதியில் வசிக்கும் மக்களையும்,

ஏனைய உயிரினங்களையும் இந்த நிலைமை மிக மோசமாகவே எதிர்காலத்தில் பாதிக்கும் என எச்சரிக்கப்படுகிறது.

இரண்டு மடங்காக அதிகரித்துள்ள இந்தப் பகுதி, வெப்பநிலையால் துருவக் கரடிகள் தமது வாழ்வைத் தக்க வைக்கப் போராடிவருகின்றன.

## கூண்டுக்குள் டைனோசர்

ஆவுஸ்ரேலியாவின் சிட்னி நகரில் உள்ள பாண்டி கடற்கரை அழகிய சுற்றுலா இடம். தினமும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் இந்தக் கடற்கரைக்கு வருகிறார்கள்.



இப்போது சீசன் தொடங்கி இருப்பதையொட்டி அந்தக் கடற்கரையில் அபூர்வ சிற்பங்கள் கலை அம்சம் மற்றும் விஞ்ஞான அறிவு ஆகியவற்றை வளர்க்கும் சிலைகள் ஆகியவை அமைக்கப் பட்டு வருகின்றன.

இந்தச் சிற்பக் கண்காட்சியில் ஒரு டைனோசர் கூண்டுக்குள் அடைக்கப் பட்டு இருப்பது போன்ற சிற்பம் கடற்கரையில் வைக்கப்படும் காட்சி.




### வெள்ளத்தால் பாதிப்பு

அம்பலவன் பொக்கணை, புதிய மாத்தளன், பழைய மாத்தளன் உட்பட்ட கிராமங்கள் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன.

இந்த ஆண்டு பெய்த மழையால், புதுக்குடியிருப்பு பிரதேசம் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்போது பெய்துவரும் மழையால் அன்றாட நடவடிக்கைகள் பாதிப்பு

(கிளிநொச்சி)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளில், அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தின் வீதிகள் பெரும் சேதமடைந்துள்ளன. நிகொட் நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட மாமுனை, கட்டைக்காடு வீதி பெரும் சேதமடைந்துள்ளது.

மழை வெள்ளம் காரணமாக களி மண்ணால் போடப்பட்ட வீதிகள் வெள்ளத்தில் அள்ளப்பட்டு சென்றுள்ளன.

குடியிருப்புப் பகுதிகளிலுள்ள வெள்ளத்தை அகற்றுவதற்காக வீதியை வெட்டவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வெற்றிலைக்கேணி பகுதிகளுக்கு அப்பால் மழை வெள்ளம் காரணமாக கட்டைக்காடு, கேவில் போன்ற கிராமங்களுக்கு போக்குவரத்துச் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, வெற்றிலைக் கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், கட்டைக்காடு பாடசாலை, கேவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை போன்றவற்றில் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் தற்காலிக கொட்டகை விழும் நிலையில் உள்ளது.

கூரையின் கிடுகுகள் காற்றால் அள்ளப்பட்டுச் சென்றுள்ளன.

(122)

## சின்னஞ்சிறு செய்திகள்

### நீர்மட்டம் உயர்ந்துள்ளது

முல்லைத்தீவு நீரபபாசன திணைக்களத்தில், குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

முத்தையன் கட்டுக்குளம் 13 அடி 3 அங்குலமாகவும், தண்ணிமுறிப்புகுளம் 13 அடி 6 அங்குலமாகவும், கணுக்கேணிக்குளம் 9 அடி 10 அங்குலமாகவும், மதவாச்சிக்குளம் 12 அடி 4 அங்குலமாகவும், விஸ்வமடுக்குளம் 17 அடி 6 அங்குல மாகவும், உடையார்கட்டுக்குளம் 9 அடி 2 அங்குலமாகவும் நீர் மட்டம் உயர்ந்துள்ளன.

### பாதை அமைப்பதை எதிர்த்து முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் தமது காணி ஊடாக வீதி அமைப்பதாக, காணி உரிமையாளர் ஒருவர் - வவுனியா நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தார்.

இராணுவ முகாமுக்கு அண்மையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் இந்த வீதி அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பாதிப்புள்ளாவதாக முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவில் இராணுவத் தரப்பையும், வீதி அபிவிருத்தி அதிகார சபையையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

# தர்மபுரம் வைத்தியசாலையில் ஆண்களுக்கான விடுதி அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - தர்மபுரம் வைத்தியசாலையில் ஆண்களுக்கான நிரந்தர நோயாளர் விடுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த விடுதி கிளிநொச்சி மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் முயற்சியால், யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்த விடுதி - இதுவரை காலமும் கிடுகால் வேயப்பட்ட தற்காலிக விடுதியாகவே இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வைத்தியசாலையில் மேலும் மகப்பேற்று விடுதி யுனிசெப் நிறுவன நிதியுதவியுடன் புனரமைப்பு செய்யப்பட்டு வருகிறது.

(இ)

# மருதங்கேணி பிரதேசத்தில் உள்ளீடுகள் வழங்கல்

மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்களுக்கு தேவையான விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்கு, நடவடிக்கை எடுக்குமாறு பெரும்பாக உத்தியோகத்தரிடம் வேண்டுகோள் விடப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியேறியுள்ள விவசாயிகள் - விவசாய உள்ளீடுகளைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

(122)

### நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில்

# க.பொ.த உயர்தர வகுப்புகளில் கணித, விஞ்ஞான வகுப்புக்கள் இல்லை

வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலத்தில் - க.பொ.த உயர்தரத்தில் கணித, விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறவில்லை.

1997 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலை தரமுயர்த்தப்பட்டு - கணித, விஞ்ஞான உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

1997 ஆம் ஆண்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின்போது, இந்தப் பாடசாலை முற்றாக அழிக்கப்பட்ட நிலையில், இடம்பெயர்ந்து வேறு இடத்தில் இயங்கி வந்தது.

தற்பொழுது சொந்த இடத்தில் இயங்கும் இந்தப் பாடசாலையில் கணித, விஞ்ஞான உயர்தர வகுப்புக்கள் நடைபெறாததால், மாணவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

### புனரமைக்கப்படாத முறிப்புக்குளம்

(மன்னார்)

மன்னார் வேட்டையான் முறிப்பு குளம் புனரமைக்கப்படாத நிலையில், படு மோசமாகப் பழுதடைந்து காணப்படுகிறது.

1999 ஆம் ஆண்டு இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ படை நடவடிக்கையின்போது, இந்தக் குளத்தின் அணைக்கட்டுச் சேதமாக்கப்பட்டது.

எனினும், இந்தக் குளத்தை இது வரையில் புனரமைப்புச் செய்யாமையால், குளத்தை அண்டிய 150 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

# வவுனியா பெரியமடு பிரதேசத்தில் முன்பள்ளிகள் இல்லாமல் சிரமம்

வவுனியா - பெரிய மடுப் பிரதேசத்தில் - முன்பள்ளிகள் இல்லாததால் இந்தப் பகுதி பெரிய மடுக்கிராம மாணவர்கள் ஆரம்பக் கல்வியைப் பெறுவதில் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தக் கிராம மாணவர்கள் 4 கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் பன்றிக்கெய்தகுளப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிக்குச் சென்றே ஆரம்பக் கல்வியைப் பெற வேண்டியநிலை காணப்படுகிறது.

இந்த நிலையில், தற்போது பெய்து வரும் பருவ மழைகாரணமாக போக்குவரத்து சீரின்மையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இதனால் அவர்களது கற்றல் செயற்பாடுகள் தடைப்பட்டுள்ளன.

ஆரம்பக் கல்வியிலேயே, தடங்கள் ஏற்படுவதால் அவர்களது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுமோ என பெற்றோர்கள் கவலையடைந்துள்ளனர்.

மேலும் சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கருத்திற்கொண்டு, பெரிய மடுக் கிராமத்தில் முன்பள்ளியை நிறுவி, இந்தக் கிராம மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு துணை புரிய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இராமநாதபுரத்தில்

வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு - வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

இநத நிகழ்வின் பொதுச் சுடரை மாயவனூர் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன், கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.தர்மசூரியர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்வின் தலைமை உரையை வட்டக்கச்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ச.பொன்னுத்துரை நிகழ்த்தினார்.

கருத்துரையை வட்டக்கச்சி பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

(9)

# தொடர்ந்து பெய்துவரும் மழையால் கிளிநொச்சியில் போக்குவரத்து தடை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

கிளிநொச்சி, கண்டாவளை, வட்டக்கச்சி, பன்னங்கண்டி ஆகிய பிரதேசங்களில் மக்கள் சைக்கிள், மோட்டார் சைக்கிள் என்பனவற்றில் பிரயாணம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றன.

இதனால் மக்கள் வெள்ளத்தைக் கடந்து போக்குவரத்துச் செய்வதற்கு, தமிழீழ புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் உதவி புரிந்து வருகிறார்கள்.

உழவு இயந்திரம் மற்றும் வாகனங்கள் என்பவற்றின் மூலம், தமிழீழ புனர்வாழ்வுக் கழக பணியாளர்களால் - இந்தப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



வட்டக்கச்சி சந்தியிலிருந்து இராமநாதபுரம் செல்லும் பிரதான வீதியில் வெள்ளம் தேங்கி நிற்பதைப் படத்தில் காணலாம்.

படம்: இராமநாதபுரம் செய்தியாளர்

# தமிழீழ காவல்துறை போக்குவரத்துப் பிரிவால் வீதி விபத்துக்கள் தொடர்பான கலந்துரையாடல்

கிளிநொச்சிப் பிரதேசத்தின் பல இடங்களில் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவால், வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன், வீதி விபத்துக் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 - 2.00 மணிவரை கருத்தூட்டல் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு - தமிழீழ புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பொறுப்பாளர் வின்சன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வீதி விபத்துக்கள் தொடர்பான கருத்துக்களை, தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவு கண்காணிப்பாளர் கு.கனகலிங்கம், பொறுப்பாளர் சி.சிவகுமாரன், துணைப் பொறுப்பாளர் ஜீவானந்தம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதேபோன்று கிளிநொச்சி சேரன் நடுவப்பணியகத்தில் அன்றையதினம் மாலை 3.00 - 4.30 மணி வரை இந்தக் கருத்தூட்டல் நிகழ்வு நடைபெற்றது.

இதில் கருத்துக்களை தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர், பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி நகருக்கு அண்மையிலுள்ள தனியார் கல்வி நிலையங்களான ஆதவன், புதிய கல்வி நிறுவனம் ஆகியவற்றில் காலை 10.00 -11.30 மணி வரையும், நண்பகல் 12.00 -1.00 மணிவரையும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களுக்கான கருத்தூட்டல் நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் - 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பணிமனையில் - கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஓட்டோ சாரதிகளுக்கான கருத்தூட்டல் நடைபெற்றது.

தற்போது மழை காலத்தில் ஏற்படுகிற விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அரச அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்கள் போன்றவற்றிலும் இந்த கருத்தூட்டல் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து.

திருக்குறள்

# நமது நோக்கு

## இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் மீண்டும் அதிகரிக்கும் இந்தியத் தலையீடு

இலங்கைப் பிரச்சினையில் தான் எந்தவகையிலும் நேரடியான தலையீடு எதனையும் செய்யப்போவதில்லையென்றும், வெளியே இருந்துகொண்டு சமாதானத்தீர்வு முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது இந்தியா தெரிவித்திருந்தது.

அப்போது சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் பங்கு அவசியம் என்றும், பேச்சுக்களை இந்தியாவில் நடாத்த அனுமதித்தால் அது வசதியாக இருக்கும் என்றும், அரசு தரப்பிலிருந்து மட்டுமல்ல விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்தும் இந்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதும் அதனை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயங்கியதும் பின் நிராகரித்ததும் கூட நினைவிருக்கலாம்.

அதன்பின் சமாதான முயற்சிகளை ரணில் தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு நோர்வே அரசின் அனுசரணையுடனும், சர்வதேச சமூகத்தின் பின்னாதரவுடனும் தொடர்ந்து மேற்கொண்டபோது - இந்தியா சமாதான நகர்வுகளின் போக்குகளை அதற்கேயுரிய உள்நோக்கங்களுடன் மிகுந்த கூர்மையாக அவதானித்துக் கொண்டே இருந்தது. அதற்கு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கத் தூண்டும் நாடுகள் அனைத்தும் அமெரிக்க ஆதரவுப் பின்னணியுடன் இயங்கும் தன்மை கொண்டவையாக இருந்ததே காரணமாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினையை மையமாக வைத்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது வல்லாதிக்க மேலாதிக்கத் தன்மையை விஸ்வரூபமாக்கிக் கொள்வதற்கு உலக வல்லரசும் தென்னாசியப் பிராந்திய வல்லாதிக்க சக்தியும் காலத்திற்குக் காலம் வெவ்வேறு வகையான அரசியல் இராஜதந்திர மற்றும் இராணுவ ரீதியான மூலோபாயங்களை வகுத்தே கடந்த காலங்களில் செயற்பட்டு வந்துள்ளபோதிலும் அதில் எவரும் முழுமையான வெற்றி இலக்கை அடைந்தது கிடையாது.

1987 ஜுலை ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாடு என்ற பெயரிலான ராஜிவ் – ஜே.ஆர் ஒப்பந்தமானது இலங்கையை தனது மேலாதிக்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியா மேற்கொண்ட ராஜதந்திர நடவடிக்கையேயாகும். ஆனால், ஜே.ஆரின் நரித்தன சதி அரசியல் நகர்வு யுக்திகளும், விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளும், இந்திய ராணுவ ராஜதந்திர நகர்வுகளுக்கு பலத்த பின்னடைவை மட்டுமல்ல வரலாற்றுத் தோல்வியையும் ஏற்படுத்தியதெனலாம்.

இதற்கு இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய அரசும் கொள்கை வகுப்பாளர்களும், ‘றோ’ எனப்படும் இந்திய புலனாய்வுப் பிரிவுகளில் ஒன்றும் கொண்டிருந்த தவறான மதிப்பீடுகளின் அடிப்படையிலானதும் தொலைநோக்குத் திறனற்றதுமான திட்டமிடல்களே காரணமாகும்.

உண்மையில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைக் காண உதவுகிறோம் என்று கூறிக்கொண்டு வேறு கபடத்தனமான உள்நோக்கங்களுடன் இலங்கையுடன் செய்து கொண்ட அவசர அவசரமான புத்திசாலித்தனமற்ற ஒப்பந்தம் இந்திய அரசு முற்றிலும் எதிர்பாராத எதிர்விளைவுகளையே தோற்றுவித்தது. சிங்கள மக்களும் சரி, தமிழ் மக்களும் சரி அந்த உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதற்குக் காரணம் அது இலங்கையின் எந்த நலனையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டதில்லை என்பதேயாகும். அந்த உடன்பாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்குமிடையே ஒரு நிரந்தர முரண் நிலையை ஏற்படுத்தும் சதித்துவ ராஜதந்திரத்துடனேயே கையொப்பமிட்டார் என்பதே உண்மையாகும்.

இந்தியா ஜே.ஆரின் உள்நோக்கத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததன் விளைவை - பின்னால் அறுவடை செய்ய நேர்ந்தது வரலாற்றுத் துயரமாகும்.


இது நடந்து பதினேழு வருடங்களாகிவிட்டது. அந்த இலங்கையரசின் கபடத்தன ராஜதந்திரத்தின் பாற்பட்ட அனுபவப் பாடங்களை இந்தியா முற்றாக மறந்துவிட்டது போலும்.

இப்போது மீண்டும் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் பொறிக்குள் இந்தியா சிக்கப்போகிறதுபோல் உள்ளது. உண்மையில் இந்த ஒப்பந்தத்தையும் ஈழத்தமிழர்களுக்கு எதிரான – சமாதானப் பேச்சுவார்த்தைச் சூழலை சிதைப்பதற்கான மற்றொரு ராஜதந்திர மூலோபாயமாகவே இலங்கையரசு கையாளவுள்ளது என்பது தெளிவான விடயம் என்பதே அரசியல் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது.

ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரே அதன் அடிப்படையில் இலங்கை விவகாரத்தினுள் இந்தியா மீண்டும் மூக்கை மட்டுமல்ல முழுத் தலையையுமே நுழைக்கத் தொடங்கிவிட்டதுபோல் தெரிகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் நிர்வாகம் தொடர்பான எந்த ஒரு ஏற்பாடும் இறுதித் தீர்வின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும் என இலங்கை – இந்திய கூட்டறிக்கை தெரிவிப்பதாகக் கூறப்படுவதை நோக்கும்போது – இலங்கையில் மற்றொரு குழப்பத்தை ஏற்படுத்த இந்தியா முனைகிறதோ என்ற சந்தேகம் எழவே செய்கிறது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் நேரடியாகப் பேசி நியாயமான முடிவு காண்பதே சாத்தியமான வழியாகும். இதற்கு சர்வதேச சமூகம் (இந்தியா உட்பட) சாட்சியாகவும், உதவியாகவும் இருக்கலாமேயொழிய தம்மிஷ்டப்படி தங்கள் அபிலாஷைகளுக்கேற்ப தீர்வை வலியுறுத்துபவர்களாகவோ, திணிப்பவர்களாகவோ இருக்கமுடியாது. பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பு இதனை அங்கீகரிக்கவும் மாட்டாது. இதனை இந்தியா புரிந்து கொள்வது அவசியமுமாகும்.

# நாடும் நடப்பும்




# வீதி விபத்துக்களைத் தடுப்பது குறித்து பாடசாலைகளில் விழிப்புணர்வு கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகிறது என்றும், அதனைத் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் ஆலோசனைகள், கருத்துக்களை பாடசாலைகள் தோறும் கோப்பாய் பிரதேச போக்குவரத்துப் பொலிஸார் வழங்கி வருகின்றனர்.

இளைஞர்கள், யுவதிகள் சரியான வீதி ஒழுங்குகளைப் பேணாது, வீதியைக் கடக்கும்போது தாம் எப்படிச் செயற்பட வேண்டும் என்று தெரியாமல் இருப்பதனாலும், சிறு வீதியில் இருந்து பிரதான வீதிக்கு வரமுறப்படும் போதும், பிரதான வீதியில் இருந்து சிறுவீதிக்குச் செல்ல முற்படும்போதும் - வேகத்தைத் தணித்து வீதியை அவதானிக்காமல் செல்வதனால்தான் அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மோட்டார் வாகனங்களில் தலைக் கவசம் அணிந்து செல்லும்படியும், இரவு நேரங்களில் வெளிச்சமின்றிச் செல்லும் வாகனங்களாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வாகனச் சாரதிகள் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துவதால் தமக்கும், ஏனைய பயணிகளுக்கும், பாதசாரிகளுக்கும் இடையூறாக அமைவதுடன், இதனால் ஏற்படும் விபரீதங்களால் தமது உயிர் மற்றும் அங்கங்களையும் இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகிறது.

2003 ஆம் ஆண்டு 73 வீதி விபத்துக்களும், 2004 ஆம் ஆண்டு 43 வீதி விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது இந்த இரண்டு விபத்துக்களை ஓரளவு தடுக்க முடிந்துள்ளது.

அதுபோல் இனிவரும் காலத்தில் விபத்துக்களை இன்னும் குறைப்பதற்கான ஒத்துழைப்பை சாரதிகள், மற்றும் பாதசாரிகள் வழங்கவேண்டும் என்று பொலிஸார் வேண்டுகின்றனர்.

மது போதையில் வாகனம் ஓட்டுவது கடும் குற்றம் என தெரிந்தும், பல சாரதிகள் மதுபோதையில் வாகனம் ஓட்டுவது தமக்கு கவலை தருவதாகவும், அப்படி ஓட்டிய சாரதிகள் ஐந்து பேர் கடந்த பத்து மாதங்களில் கைதுசெய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு கோப்பாய் பிரதேசத்தில் ஒன்பது பேர் வீதி விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். போக்குவரத்து தொடர்பான செயற்பாட்டு விளக்கங்கள் பரவலாகப் பொலிஸாரால் பாடசாலைகள் தோறும் வழங்கப்பட்டுவரும் இந்த நிலையில் - ஏனைய தனியார் நிறுவனங்கள், கிராமங்கள், சனசமூக நிலையங்கள் ஊடாக வீதி விதிமுறைகள் தொடர்பான கருத்துக்கள், விளக்கங்களை மக்கள், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி, விழிப்பாக பயணம் செய்ய ஆலோசனைகள் வழங்கும்படி கோப்பாய் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.மகிந்த திஸநாயக்க தெரிவித்தார். (63)

# தனிநாடு கோரிய புலிகள் இன்று தன்னாட்சி நடத்த கோருகின்றனர்

(கொழும்பு)

தனிநாடு ஒன்று தமக்குவேண்டும் என்று கூறிக்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள், இன்று அதனைக் கைவிட்டு ஐக்கிய இலங்கைக்குள் தன்னாட்சி நடத்தி வாழ்வோம் என்ற உடன்பாட்டுக்கு வந்துள்ளதாக மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் மேல்மாகாண மக்கள் முன்னணியால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த அரசியல் கூட்டமொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகள் ஆரம்பத்தில் தனிநாடு ஒன்றுக்கான ஆயுதப் போராட்டம் ஒன்றையே நடத்தி, பின்னர் அதனை இன்று கைவிட்டுள்ளனர்.

புலிகள் இன்று இடைக்கால தன்னாட்சி வரைபு ஒன்றை முன்வைத்திருக்கின்றனர். இந்த வரைபை அப்படியே ஏற்றுக்கொண்டு ஆட்சி அதிகாரத்தை விடவேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. அதனை அடிப்படையாக வைத்துக்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்போம் எனக் கூறியிருக்கிறார்கள். எனவே இந்த வரைபின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கசிப்பு விநியோக முகவர்கள் கைது!

கோண்டாவில் பகுதியில் கசிப்பு விநியோகித்துவந்த முகவர்கள் - அந்தப் பகுதி சனசமூக நிலைய இளைஞர்களால் பிடிக்கப்பட்டு, கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ஊரெழு, உரும்பிராய் பகுதிகளில் அதிகரித்துவரும் கசிப்பு உற்பத்தியைத் தடுக்கும் நோக்குடன், அந்தப் பகுதி சனசமூக நிலைய இளைஞர்கள் இந்தச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கசிப்பு விநியோக முகவர்களான, ஊரெழு கிழக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரும், கோண்டாவிலைச் சேர்ந்த ஒருவருமே பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களாவர். (82)

# கணித பாட இறுவெட்டு வடமராட்சியில் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி பிரிவின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்திக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஏ.வேதநாயகம் தயாரித்த கணித பாட இறுவெட்டு வெளியீடு நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் இயங்கிவரும் வடமராட்சி கணித மூலவள நிலையத்தில் நடைபெற்றது.

இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கலந்துகொண்டார். வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.

இறுவெட்டின் முதல் பிரதியை திருமதி ஏ.வேதநாயகம் வெளியிட்டு வைக்க, நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் பிரதி மாகாணக் கல்விப்பணிப்பாளர் சி.சிவராசா வாழ்த்துரை வழங்கினார். வடமராட்சி கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் இதில் கலந்துகொண்டனர்.

கணித பாடத்துக்கான இறுவெட்டு தயாரித்து வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, விஞ்ஞான பாடத்துக்கான இறுவெட்டு வெகுவிரைவில் வெளியிடபபடுமென விழாவுக்கு வருகை தந்திருந்த வட - கிழக்கு மாகாண உத்தியோகத்தர்கள் அனைவரும் நம்பிக்கை வெளியிட்டனர். இறுதியில் சமுகமளித்த பாடசாலைகளுக்கு இலவச இறுவெட்டு வழங்கப்பட்டது. (13)

அரசியல் கட்டுரை...

- கே.ரீ.கணேசலிங்கம்

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை வரலாற்றில் இந்தியாவின் முக்கியத்துவம் தனித்துவமானதாக அமைந்துவிடுகின்றது. சுதந்திரத்துக்கு பின்பும் சரி, அதற்கு முன்பும் சரி, இலங்கையின் போக்கினால், அதிக பாதிப்புகளையும், நெருக்கடிகளையும் இந்தியா சந்தித்துவருவதனால், இலங்கை விடயத்தில் மிக நுணுக்கமான முடிவுகளை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது. அனேகமான வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர்களும், புலமையாளர்களும் இலங்கை, இந்தியாவுக்கு எதிரான வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டிருப்பது இலங்கைக்கே அதிக ஆபத்தாக அமையுமென வாதிடுகின்றனர்.

விடயத்தில் தென்னிலங்கையை அதிகம் பயன்படுத்த விரும்புவதே பாதுகாப்பு உடன்படிக்கையின் முக்கியத்துவமாகும். ஏற்கனவே பொருளாதார ஆதிக்கத்தை தென்னிலங்கையில் செலுத்திவரும் இந்தியா, இராணுவ ரீதியாகவும், இந்தியாவின் மேலாதிக்கத்தை சாத்தியப்படுத்துவதாக உடன்பாடு அமையும். சந்திரிகாவின் உபாயத்தில், விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிப்பது மட்டுமே இருக்கும் போது, இந்தியாவின் உபாயம் பலநோக்கங்களை நிறைவேற்றுவதாக உள்ளது. வடக்கு - கிழக்கு பிரதேசம் பற்றி எண்ணப்பாட்டை இராணுவ ரீதியாக அணுக விரும்பாத இந்தியா - இலங்

நாடுகள் வகுக்கும் கொள்கைகளுக்கு அசைந்து போகும், இடங்கொடுக்கும் நடைமுறையையே ஒவ்வொரு அரசாங்கமும் மேற்கொண்டு வருகிறது, அத்தகைய ஒரு நடைமுறை விடயமே தற்போதைய பாதுகாப்பு உடன்படிக்கையாகும். எனவே இலங்கை இந்தியாவின் கொள்கை வகுப்புக்குள் அடங்கும் நடைமுறை அரசாக விளங்குகிறது. அதிலும் குறிப்பாக தென்பகுதிப்பிரதேசமே அவ்வகைச் சூழலுக்குள் அகப்பட்டுள்ளது.

வட-கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்த மட்டில், இந்தியாவின் இராணுவ ரீதியான அச்சுறுத்தலும், ஆதிக்கமும் எப்படியானதென்பது, 1987-1989 வரை தெளிவாகப்

விஜயத்துடன், அமெரிக்க விசேட தூதுவர் றிச்சட் ஆர்மிரேஜ் வருகையும் ரத்தானது. இது இந்திய - அமெரிக்க அரசியல் போக்கை விளங்கிக் கொள்ளப் போதுமானது. அமெரிக்காவின் ஜனாதிபதி புஷ் தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தின் அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்த விரும்பியதால் ஆர்மிரேஜ்ஜின் வருகை ரத்தானதெனக் கூறப்பட்டாலும், ஆர்மிரேஜ் ஒரு ராஜதந்திரி என்ற வகையில் அவ்வாறு அவர் செயற்பட்டிருக்க மாட்டார். அமெரிக்காவைப் பொறுத்தவரை, இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் வேண்டப்படாத ஒன்றாகவே உள்ளது. இந்தியாவின் ஆதிக்கமும், செல்வாக்கும்

# இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்பாடு யாரைப் பாதிக்கும்?

ஆனால் அவர்கள் வாதிடுவதற்கு முன்வைக்கும் ஒரே காரணம் புவியியல் ரீதியான அமைவிடம் மட்டுமேயாகும். இது கியூபாவுக்கோ, தைவானுக்கோ, கிழக்கு திமோருக்கோ பொருத்தமில்லையென்றால் இலங்கைக்கும் பொருத்தமற்றவாதமாகும். எனவே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் சந்திரிகா குமாரதுங்காவின் இந்திய விஜயத்தையும், அதனால் ஏற்படப்போகும் பாதிப்புகளையும் பரிசீலனைக்கு உட்படுத்துவோம்.

முதலில் இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்றதோ இல்லையோ, அதனால் ஏற்படப்போகும் பாதிபபுகள் எவ்வாறானதாக அமையும் என்பதை நோக்குவோம். இரண்டு நாட்டுத் தலைவர்களுமே இந்த உடன்பாட்டைச் செய்வதில் முனைப்பாக இருக்கின்றனர். இதேபோன்றுதான் சந்திரிகா குமாரதுங்க 1998 ஆம் ஆண்டு இந்தியாவுடனான பொருளாதார உடன்படிக்கையிலும் செயற்பட்டார். பல பொருட்களுக்கான தீர்வையற்ற வர்த்தக உடன்பாட்டில் ஒப்பமிட முடியாதென ஒரு தடவை இலங்கைக்கு திரும்பி வந்தார். ஆனால் அடுத்த தடவை சென்று, அந்த உடன்பாட்டில் ஒப்பமிடவேண்டிய நிர்ப்பந்தத்தையோ நெருக்கடியையோ இந்தியத்தரப்பு ஏற்படுத்தியிருந்தது. மறுக்கமுடியாது ஒப்புதல் அளித்துவிட்டார். அதன் விளைவுகளை வடக்கு - கிழக்கை விட தென்னிலங்கையே அனுபவிக்கின்றது. அவ்வாறுதான் சந்திரிகா எந்த விடயங்களில் மாற்றம் செய்ய வேண்டுமெனக் கருதுகிறாரோ அவற்றையெல்லாம் இந்தியத் தரப்பு சரிக்கட்டி, தனது விருப்பத்துக்கு ஏற்பவே உடன்பாட்டை ஏற்கச் செய்யும். அது இந்தியத்தரப்புக்கு உள்ள தந்திரமும் பலமுமாகும்.

இந்திய இராணுவத் தளபதியை இலங்கைக்கு அனுப்பி எல்லாத் தலைவர்களையும் சந்திக்க வைத்த இந்தியத் தரப்பின் உபாயமே, சந்திரிகாவின் இந்திய விஜயத்தில் அவசியத்தை அதிகரிக்க வைத்தது. அவ்வாறே இந்தியத் தரப்பு, இலங்கையின் ஜனாதிபதியைக் கையாண்டு, பாதுகாப்பு உடன்படிக்கையை சாத்தியப்படுத்திவிடும் என்பதில் அதிக சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

உடன்படிக்கையில் உள்ள அனேக அம்சங்களைப் பற்றி ஊடகங்கள் அதிக வாதப்பிரதிவாதங்களை நிகழ்த்துகின்றன. அனேக ஊடகங்களில் வரும் தகவலின்படி, இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலான உடன்படிக்கையாகவே இது அமையுமென நம்பப்படுகின்றது. ஆனால் இலங்கைக்கு இறைமை இருக்கிறதா என்பதும், அத்தகைய இறைமையின் பிரயோகம் வட-கிழக்குப் பிரதேசத்தில் மட்டு மன்றி தென்பகுதியிலும் கேள்விக்குரியதாகவே கருதப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தை தெளிவாக பயன்படுத்த முயலும் இந்தியத்தரப்பு, உடன்படிக்கை வாயிலாக தென்னிலங்கையின் மீது தமது செல்வாக்கை அதிகப்படுத்த விரும்புகிறது. தென்னிலங்கையை இலக்குவைத்து பல ஊடகங்களை நிகழ்த்தும் இந்தியா தனது எல்லையைத் தெளிவாக நகர்த்தி வருகின்றது. 1984களில் இலங்கை முழுவதையும் கைப்பற்ற இந்திரா காந்தி கொள்கை வகுத்திருந்தார் என்பதும் அதற்காக இராணுவப் பிரிவொன்று தயாராக இருந்ததென்ற தகவலும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரத்தக்கது. அந்த வகையில் மதிப்பிட்டுப் பார்ப்போமாயின், 1989 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்குப் பிரதேசத்திலிருந்து இந்தியா தனது படைகளை விலக்கிக் கொண்ட பின்னர் தென்னிலங்கையையே அதிகம் பயன்படுத்தியுள்ளது. தென்னிலங்கையில் தனது செல்வாக்கு அரசாங்கத்தை அமைபபதிலும், அதனைத் தக்கவைப்பதிலும் முனைப்புக் கொள்ளும் இந்தியா, அமெரிக்கா போன்ற சக்திகளின் ஊடுருவலையும் தவிர்க்கவே விரும்புகிறது. ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் வீழ்ச்சியடைந்தமைக்கு வலுவான பங்கு வகித்தது இந்தியா. இது பற்றி இதே பத்தியில் ஏற்கனவே ஒருதடவை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அதனால் இந்தியத் தரப்பு, இலங்கை

கையின் நிலப்பரப்பில் தனது ஆதிக்கம் எங்காவது ஒரு பக்கம் இருக்கவேண்டுமென்பதே அதன் நோக்கமாகும்.


வடக்கு - கிழக்கை அரசியல் மற்றும் புலனாய்வு உபாயங்களுக்கூடாக பிரயோகிக்க விரும்பும் இந்தியா, தென்னிலங்கையில் பலமான இராணுவ ஆதிக்கத்தை சாத்தியப்படுத்த முனைகின்றதென்பதும் பாதுகாப்பு


புலப்பட்டுவிட்டது. தமிழ் மக்களின் அரசியலும் இராணுவ உபாயமும் வெளிப்படையாக இந்திய இராணுவத்தை எதிர்கொண்டபோதே, இந்தியாவினது ஆபத்துக்களையும், வஞ்சகத் தனங்களையும் நன்கு புரிந்துள்ளன. மிக அதிகமான பாதிப்பை வடக்கு - கிழக்கு அனுபவித்ததுடன், இந்திய இராணுவத்தை வெளியேற்றுவதில் கணிசமான பங்கெடுத்துக் கொண்ட பிரதேசமும், வடக்கு - கிழக்கேயாகும். எனவே 1987இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் கீழ் வடக்கு - கிழக்கில் மட்டும் ஒரு இலட்சம் துருப்புக்களை, குவித்து வைதது பெரிதாக சாதிக்கமுடியாத நிலையை இந்தியத் தரப்பு அனுபவித்தது. தனது

ஒரு எல்லையோடு இலங்கை விடயத்தில் இருப்பதையே அமெரிக்கா விரும்புகிறது. அமெரிக்க இராணுவப் பிரிவுத் தளபதி ஒருவர் இலங்கையைத் தாம் இழக்கத் தயாரில்லை என கடந்த இரண்டு மாதத்துக்கு முன்னர் கூறியதையும் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

எனவே ஆர்மிரேஜ்ஜின் விஜயம் ரத்தானதுக்கும் சந்திரிகா இந்தியா சென்றதற்கும் இடையில் அதிக நெருக்கமுண்டு. இறுதி வரைக்கும் அமெரிக்கர்கள் பாதுகாப்பு உடன்பாட்டைத் தடுக்கவும், சமாதானப் பேச்சுக்களைத் தொடரவும் பல பிரயத்தனங்கள் முன்னெடுத்தார்கள். முதலில் நோர்வே தூது







உடனபடிக்கையின் நேரடி விளைவு தென்னிலங்கையை நோக்கியதென்பது தெளிவாகிறது. ஜனதா விமுக்தி பெரமுனவையும் தனது கைகளுக்குள் போட்டுள்ள இந்தியா, தென்னிலங்கையின் பொருளாதார அரசியல், இராணுவ சக்தியாக வளர்ந்து வருகின்றது. இலங்கை ஆட்சியாளர்கள், விடுதலைப்புலிகளை தோற்கடிக்க முயலுகின்றோம் என்ற உபாயத்தை வெளிப்படுத்திக் கொண்டு, தென்னிலங்கையை இந்தியாவுக்கும், மேற்கு

இலக்கை அடைய முடியாது வெளியேறிய இந்தியத் தரப்பு, மீண்டும் அவ்வகையான ஒப்பந்தத்தால் அதிக பாதிப்பை வடக்கு - கிழக்கு பிரதேசத்துக்கு ஏற்படுத்தலாமெனக் கருதுவது அதீதமான வாதமாகவே அமையும். இலங்கை - இந்திய உடன்படிக்கையில் சாதிக்க முடியாத இந்தியத் தரப்பு, பாதுகாப்பு உடன்படிக்கையால் என்னத்தை பெரிதாகச் சாதிக்கப் போகின்றது என்பதே அடுத்த கேள்வியாகும்.

வர், விசேட தூதுவர் என முயன்று செயற்பட்டனர். பின்னர் ஜப்பானிய விசேட தூதுவரை அனுப்பி நிலைமையை சமாதானமாகக் கையாளமுயன்றனர். இரண்டு பிரிவினரும் இலங்கையில் நிகழ்த்திய உரையாடலைத் தொடர்ந்து இந்தியாவுக்கு சென்றமை கவனிக்கத்தக்கது. அதனால் சந்திரிகாவின் நடவடிக்கையை ஒருபுறம் அமெரிக்கா எதிர்க்கின்றது என்பதைக் காட்டவும், சந்திரிகா இந்தியாவுடன் இசைந்து செயற்படுகிறதென்பதை தாம் ஏற்கவில்லை என்பதையும், காட்டுவதற்கான நடவடிக்கையாகவே ஆர்மிரேஜின் விஜயம் ரத்தானது.

எனவே இந்திய சார்புக் கொள்கைக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அமெரிக்க விளக்கம் புதிதாகவும், மாறுபட்டதாகவும் அமையும். அதனால் இந்தியாவுக்குப் போட்டியான அணுகுமுறையொன்றை அமெரிக்கா பின்பற்றுவது தவிர்க்க முடியாததொன்றாகவே அமையும். அது தென்னிலங்கையில் மட்டும் தான் மாறுதலை ஏற்படுத்துமா? அல்லது வடக்கு - கிழக்குப் பகுதியையும் உள்ளடக்குமா? என்பதை உடனடியாக அமெரிக்கா காட்டத் தவறினாலும், மாற்று நடவடிக்கை ஒன்றை நிச்சயம் மேற்கொள்வது உறுதியாகும்.

எனவே இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தென்னிலங்கையை நோக்கியதாகவே அமையும் என்பது தெளிவாகிவிட்டது. ஏற்கனவே வடக்கு - கிழக்கு இப்படியான ஓர் உடன்பாட்டினால் அதிக விடயங்களையும் விளைவுகளையும் அனுபவித்தது மட்டுமன்றி, இந்தியா அதன் பங்கையும் அனுபவிக்கத் தவறவில்லை என்பதனால் இந்த உடன்படிக்கை வடக்கு - கிழக்கைப் பாதிக்கப்போவதில்லை. அப்படியான பாதிப்பு ஏற்பட்டாலும் வடக்கு - கிழக்கு அதனை எதிர்கொள்ளும் திராணியுடன் காணப்படுகின்றது. தென்னிலங்கை அரசும் அதன் வலுவும் குன்றுவதுடன் பாதுகாப்பற்ற நிலைக்குள் தென்னிலங்கை மக்கள் தள்ளப்படுவார்கள். அவர்களது அனைத்துப் பலத்தையும் நிர்ணயிக்கும் சக்தியாக இந்தியாவே திகழும். அவ்வாறான சூழலிலிருந்து தென்னிலங்கையை மீட்டெடுக்க முடியாத நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே பாதுகாப்பு உடன்படிக்கையைப் பயன்படுத்தி வடக்கு - கிழக்கை மிரட்ட முடியாது. அத்தகைய மிரட்டலுக்கு வடக்கு - கிழக்கு பலியாகக் கூடிய சூழலில் இல்லை என்பதை விளங்கிக் கொள்வது அவசியம்.

**இந்திய இராணுவத் தளபதியை இலங்கைக்கு அனுப்பி எல்லாத் தலைவர்களையும் சந்திக்க வைத்த இந்தியத் தரப்பின் உபாயமே, சந்திரிகாவின் இந்திய விஜயத்தில் அவசியத்தை அதிகரிக்க வைத்தது. அவ்வாறே இந்தியத் தரப்பு, இலங்கையின் ஜனாதிபதியைக் கையாண்டு, பாதுகாப்பு உடன்படிக்கையை சாத்தியப்படுத்திவிடும் என்பதில் அதிக சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.**

சக்திகளுக்கும் அடமானம் வைக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். முழுக்க முழுக்கத் தென்னிலங்கை அடிமைப் பிரதேசமாக மாறிக்கொண்டு செல்கிறது. இது சுதந்திர காலத்திலிருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும், ஆட்சியாளர்களும் மேற்கிடமும், இந்தியாவிடமும் மாறி மாறி அடமானம் வைத்த அரசியலையே மேற்கொண்டுள்ளனர். எப்படி சுதந்திரம் வானொலியில் கேட்டுக் கிடைத்ததெனக் கருதினார்களோ, அப்போதிருந்தே அடிமை வரலாறு ஆரம்பித்துவிட்டது. இதனையே இலங்கை ஆட்சியாளர்களும் அவர்களுக்கு சலாமிடும் புத்திஜீவிகளும் வெளிநாட்டுக் கொள்கை என்கின்றனர். ஆனால் உண்மையில் இலங்கை உலக

தமிழ்த்தரப்பின் சில பிரிவினரை திருப்திப்படுத்த அவ்வாறு பேசிக் கொள்வதைத் தவிர, வேறு எதனையும் இன்றைய சர்வதேச அரசியல் சூழலில் இந்தியா அடையமுடியாது. அவ்வாறு அடைய முயன்றால், மீண்டும் அதிகளவான பாதிப்பை இந்தியத் தரப்பு சந்திக்க வேண்டிய நிலையே ஏற்படும். இதனை விளங்கிக் கொள்ள சர்வதேச அரசியல் சூழலையும் நோக்குதல் வேண்டும்.

மீண்டும் அமெரிக்காவில் புஷ்ஷின் ஆட்சிக்காலம் நான்கு வருடத்தால் நீடிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பின்பற்றப்பட்ட கொள்கை தொடர்வதுடன் மேலும் தீவிரமடையும். இதனை ஒரு சிறு உதாரணத்துடன் விளக்கலாம். அதாவது சந்திரிகாவின் இந்திய

# பலூஜா நகர் மீதான தாக்குதலை அமெரிக்கப் படைகள் ஆரம்பித்தன!



(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் நோக்குடன் அமெரிக்க மற்றும் ஈராக் படைகள் பாரிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் படை நடவடிக்கையின் மூலம் மேற்குப் பகுதியிலுள்ள ஒரு வைத்தியசாலையையும், இரண்டு பாலங்களையும் படையினர் தமது கட்டுப்பாடிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

அமெரிக்கப் படையினர் பெருமெடுப்பில் ஆட்லறித் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். பதிலுக்குக் கிளர்ச்சிவாதிகளும் சிறியரக ஆயுதங்கள்மூலம் எதிர்த்தாக்குதல்களை நடத்திவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு படையினர் பலூஜா நோக்கிய நகர்வை ஆரம்பித்ததாகவும், இதன்போது இரண்டு பாலங்களும் பிடிபட்டதாகவும், இந்தப்பாலங்களே மேற்குப் பகுதி நகரங்களுக்குச் செல்லும் பிரதான வீதியெனவும், அமெரிக்கப் படைகளுடன் சென்றுள்ள பி.பி.சி செய்தியாளரான குயில் லோறன்ஸ் தெரிவித்தார்.

நேற்றுக் காலை சூரிய உதயத்தின்போது கிளர்ச்சிவாதிகள் மோட்டார் மற்றும் சிறியரக ஆயுதங்களால், அமெரிக்கப்படையினர் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியுள்ளனர். அமெரிக்கப்படையினர் பலூஜாவின் நகரப் பகுதிக்கு சென்றது தொடர்பான எவ்வித தகவலும் வெளிவரவில்லை. ஆனாலும், இந்தப் படையெடுப்பின்போது வீதிக்கு வீதி அமெரிக்கப்படைகள் எதிர்ப்பை சந்திக்க வேண்டிவருமென எதிர்பார்க்கப்படுகிறது.

1968 ஆம் ஆண்டு வியட்நாமின் கியூ நகர்மீது படையெடுத்து 142 படையினரை இழந்து பல்லாயிரம் எதிரிகளைக் கொன்ற களம் போல ஈராக்கின் பலூஜாவும் இருக்குமென அமெரிக்கக் கடற்படை கருதுவதாக பி.பி.சியின் போல் வூட் தெரிவித்தார்.

தமது இந்தப் படை நடவடிக்கையின்போது கிளர்ச்சிவாதிகள் கார்க்குண்டுத்தாக்குதல், தற்கொலைத் தாக்குதல் மற்றும் இரசாயனத் தாக்குதல் போன்றவற்றை தம் மீது நடத்தலாமென அமெரிக்கப் படைத் தளபதிகள் கருதுகின்றனர்.

இதேவேளை, பாக்தாத்தின் மேற்குப் பகுதியில் அமெரிக்க இராணுவத் தொடரணி மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதுடன், நால்வர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அத்துடன் பாக்தாத்திலுள்ள ஈராக்கின் நிதியமைச்சரின் இல்லத்திற்கருகில் கார் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதல் நடைபெற்றவேளை அமைச்சர் வீட்டிலிருக்கவில்லையெனவும், அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கின் தென்பகுதி சுபைர் நகரில் இடம்பெற்ற வீதியோரக் குண்டுவெடிப்பில் பிரிட்டிஷ் ஒப்பந்தகாரர் ஒருவர் கொல்லப்பட்டதாக பிரிட்டிஷ் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

## அரபாத்தின் மனைவியின் கருத்தையடுத்து

# பலஸ்தீன உயர்மட்டக்குழு பாரிஸ் செல்வதைக் கைவிட்டது!



யாசிர் அரபாத்தின் மனைவி சுகா தெரிவித்த கருத்தையடுத்து, பாரிஸில் சிகிச்சை பெற்றுவரும் அரபாத்தை பார்வையிடச் செல்லவிருந்த பலஸ்தீனத்தின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவினர் தமது பயணத்தை இரத்துச் செய்துள்ளனர்.

அரபாத்தை உயிருடன் புதைத்துவிட்டு, அவரது அதிகாரத்தைக் கைப்பற்றவே பலஸ்தீனத்திலிருந்து ஒரு குழு பாரிஸ் வருவதாகவும்- எனவே, இது தொடர்பாக மிகவும் கவனமாக இருக்க வேண்டுமெனவும் அத்துடன், அரபாத்தின் உடல் நிலை நல்ல நிலையில் இருப்பதாகவும், அவர் தனது தாய் நாட்டுக்குத் திரும்புவாரெனவும் அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு சுகா தெரிவித்தார். இவரின் இந்தக் கூற்றையடுத்தே பலஸ்தீனத்தின் உயரதிகாரிகளான - பலஸ்தீன பிரதமர் அகமட் கூரே, பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ம.்.மூட் அபாஸ் மற்றும் வெளியுறவு அமைச்சர் றபீல்சா ஆகியோர் தமது விஜயத்தை இரத்துச்செய்தனர்.

இவர்கள் தமது விஜயத்தை இரத்துச் செய்ததை பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சர் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனாலும், இவர்கள் பிரான்ஸிற்குச் செல்வதற்கான முயற்சிகளைத் தாம் மேற்கொண்டு வருவதாக அரபாத்தின் உதவியாளரான தயீப் அப்துல்ரகீம் தெரிவித்தார்.

அரபாத், மனைவி சுகாவின் தனிப்பட்ட சொத்தல்ல என பலஸ்தீன அமைச்சரவையின் பிரதி அமைச்சர் சுபியான் அபு சைபா தெரிவித்தார். அத்துடன், பலஸ்தீன மக்களுக்கு சுகாவைத் தெரியாது. அவர் கடந்த மூன்று வருடங்களாக, கணவரான அரபாத்தை பார்வையிடவுமில்லை எனவும் அவர் இஸ்ரேலிய வானொலிக்குத் தெரிவித்தார்.

அரபாத் மீளமுடியாத கோமா நிலைக்குச் சென்றுவிட்டதாக வெளிவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இதனை மறுத்த சாட், அரபாத் கோமா நிலையிலேயே உள்ளார். ஆனால், அதுமீளத்திரும்பக் கூடியது. அத்துடன், அவரது மூளை எந்தவொரு பாதிப்பும் அடையவில்லை எனவும் தெரிவித்தார். ஆனால், அரபாத்தின் நிலை மிகவும் சிக்கல் நிறைந்த தாகவுள்ளது. அத்துடன் ஆபத்தான நிலையிலும் உள்ளது. ஆனாலும், அவர் ஸ்திரமான நிலையில் உள்ளபோது நாம் அவருடன் உரையாடுகின்றோம என, பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் மைக்கல் பாரியர் தெரிவித்தார்.




# நெதர்லாந்தில் முஸ்லிம்களின் பாடசாலையில் குண்டுவெடிப்பு



(லண்டன்)

இஸ்லாமிய மதத்தை நிந்தித்து படம் எடுத்த காரணத்தால் திரைப்பட இயக்குனர் தியோ வான்கோ கடந்தவாரம் நெதர்லாந்தில் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்ட சம்பவத்திற்குப் பழிவாங்கும் நோக்கில் நெதர்லாந்தில் அமைந்துள்ள இஸ்லாமிய பாடசாலையொன்று வெடிகுண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

நெதர்லாந்தின் தென்பகுதியில் என்ட் கூவன் நகரில் அமைந்துள்ள பாடசாலையொன்றே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானது. இதன்போது பாடசாலையின் முன்பக்கக் கதவு முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் கடந்தவாரம் நெதர்லாந்திலுள்ள பள்ளிவாசல்கள் மற்றும் நகரங்கள் என்பன மீது தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டிருந்தபோதும், அது தோல்வியில் முடிவடைந்தது. இதேவேளை இஸ்லாத்தின் பெயரால் நெதர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினரான கீற் வைல்டர்ஸ் என்பவரை கழுத்தை அறுத்து கொல்ல முயற்சிசெய்த இரண்டு முஸ்லிம்களை நெதர்லாந்துப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

திரைப்பட இயக்குனர் வான்கோ கொல்லப்பட்ட பின்னர் குடியேற்றவாசிகளைத் தடைசெய்ய வேண்டுமென்ற திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தயார்ப்படுத்தலில் தான் ஈடுபட்டிருந்த காரணத்தால் தன்மீது இந்தக் கொலை முயற்சி நடந்திருக்கலாமென வைல்டர்ஸ் தெரிவித்தார்.

வான்கோ கொல்லப்பட்ட பின்னர் பல இஸ்லாமிய அடிப்படைவாதிகளை நெதர்லாந்துப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

நாகம்ஸ் சுன்னாகம்
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், நடித்த அரசாட்சி
தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடான R.B.சௌத்திரியின் சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த



சத்ரபதி (ரீல்ஸ்)
முற்பதிவுகளுக்கு யாழ்.பெயின்ற் காடன், கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00.10.00 (பு.நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
கேம்பஸ் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30 (பு.நே)
SPIDERMAN-I இரவுக் காட்சி: 8.30 (பு.நே)
விரைவில் ட்ரீம்ஸ்
(சி-3319)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், பிரபுதேவா, வடிவேல், நமீதா நடித்த
